" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2015-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **“ பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
பெருமை உடைய செயல்.”**

**பொருள் :** **பெருமைக்குரிய பண்பு உடையவர், செய்வதற்கு முடியாத அரிய செயல்களையும் திறம்படச் செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவர்கள் ஆவர்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>CW1/039104/2014</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை நிலை எண்.157, நாள் : 10.12.2014-ன்படி மாநகராட்சி மேயர்களை “வணக்கத்திற்குரிய மேயர்” என அழைக்கும் நடைமுறைக்கு பதிலாக “மாண்புமிகு மேயர்” (Hon’ble Mayor) என அழைக்கப்பட வேண்டும் என்ற அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>தீர்மான எண்:796</u>
<u>பதிவு செய்யப்பட்டது.</u>

**2) <u>சி.டபிள்யு.1/039278/2014</u>**

அரசாணை நிலை எண்.220, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:28.09.2011–ன்படி மதுரை மாநகராட்சியுடன் III-ம் நிலை நகராட்சிகள் (அவனியாபுரம், ஆணையூர், திருப்பரங்குன்றம்) 3 பேரூராட்சிகள் (ஹார்விப்பட்டி, திருநகர், விளாங்குடி) மற்றும் 11 கிராம ஊராட்சிகள் (மேலமடை, உத்தங்குடி, வண்டியூர், கண்ணனேந்தல்,

நாகனாகுளம், திருப்பாலை, சின்னஅனுப்பானடி, சிந்தாமணி, ஐராவாதநல்லூர், புதுக்குளம் பிட் II, தியாகராயர் காலனி) ஆகிய இணைப்பு பகுதிகளைக் கொண்ட 28 வார்டுகளுடன் 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தேர்தல் துறை அரசாணை நிலை எண்.124 நாள்:07.09.2011–ன்படி உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தேர்தல்கள் துறை அரசாணை நிலை எண்.124, நாள்:07.09.2011–ன்படி உள்ளாட்சி தேர்தல்–2011, 17.10.2011–ஆம் தேதியன்று நடைபெற்று, 21.10.2011–ஆம் தேதியன்று தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டது. அதன்படி 25.10.2011–ஆம் தேதியன்று மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றுக்கொண்டனர். மேற்படி புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் (100 நபர்கள்) மாமன்ற கூட்டங்கள் பற்றிய பயிற்சி வகுப்புகள் (Training Classes) நடத்தப்பட வேண்டுமென்பதால், மற்ற மாநிலங்களின் மாநகராட்சிகளில் (மும்பை மற்றும் குஜராத்) நடைபெறும் மாமன்ற கூட்டங்களில் கலந்துகொண்டு கலந்தாய்வு செய்வதற்கும் மாமன்ற உறுப்பினர்களை இரண்டு குழுக்களாக பிரித்து முறையே வரும் மாதங்களில் கலந்து கொள்ளவும், அரசின் அனுமதி பெறுவது தொடர்பாகவும் அதற்கான செலவுகளை மதுரை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:797**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 3) ம. பொ. 4/ 21398 /2014

மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டங்கள், வைகை அணை அல்லது வைகை ஆற்றுப்படுகையினை ஆதாரமாக கொண்ட திட்டங்களாகவே உள்ளன. இது தவிர தற்போது புதிதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு காவிரி ஆற்றுப்டுகையினை குடிநீர் ஆதாரமாக கொண்ட திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

1980 வரை குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் 600மில்லியன் கன அடி நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீர் வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டிருந்த நீர் ஆதாரங்களான மேலக்கால், கோச்சடை நீர் சேகரிப்பு கிணறு, கோச்சடை நீர் உறிஞ்சும் கிணறு போன்ற நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக தேவையான நேரத்தில் வைகை அணையிலிருந்து திறந்து விடப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. கடந்த 1970 முதல் 1990ம் ஆண்டு வரை நகரமயமாக்குதலின் கீழ், மதுரை மாநகர் மிகப் பெரிய வளர்ச்சியினை எட்டியது. இந்த காலக்கட்டத்தில் மக்கள் தொகையும் கணிசமாக உயர்ந்த நிலை ஏற்பட்டது.

மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் வருடம் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட 600 மில்லியன் கன அடி என்பதனை 1500 மில்லியன் கன அடி என்று கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது (அரசாணை எண். 878, நாள். 04.06.1985). மேலும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட நீரினை 900 மில்லியன் கன அடி குழாய் மூலம் வைகை அணையிலிருந்து எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்து 68 MLD கிடைக்கப் பெறுமான திட்டம் 1995ம் ஆண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. பின்னர் வைகை ஆற்றுப்படுகையின் வழியே நீர் ஆதாரங்களை வளப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதமுள்ள 600 மில்லியன் கன அடி நீரை சேதாரங்களை தவிர்ப்பதற்காக குழாய் மூலம் கொண்டு வரும் திட்டம் உருவாக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டது.

தற்போதைய ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சி 100 வார்டுகளைக் கொண்டதாகவும் மக்கள்தொகை சுமார் 16.00 இலட்சம் கொண்டதாகவும் இருக்கிறது. மேலும் வரும் 2021, 2036 மற்றும் 2051ம் ஆண்டுகளுக்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மதுரை மாநகராட்சியின் இன்றைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் **800** மில்லியன் கன அடி நீர் கூடுதலாக தேவைப்படும் என்ற நிலை உள்ளது. மேற்கண்ட கூடுதல் குடிநீரினை பெறுவதற்கு முல்லை பெரியார் அணையிலிருந்து

பெறப்படும் குடிநீரினை ஆதாரமாகக் கொண்டு செயலாக்கம் செய்யப்படும் திட்டம் ஒன்றே இசைவானதாகவும் குறைவான திட்ட மதிப்பீடு மற்றும் பராமரிப்பு செலவு உள்ளதாகவும் இருக்குமென கண்டறியப்பட்டது.

இத்திட்டத்தின் படி முல்லை பெரியார் அணை (லோயர் கேம்ப்) புனல்நீர் மின்சார நிலையத்திலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் கூடலூர், கம்பம், தேனி, வைகை அணை குள்ளபுரம், A. வாடிப்பட்டி வழியே பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரவும் பின்னர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கண்ணாபட்டி, அணைப்பட்டி, தேனூர் வழியே மதுரை மாநகரினை வந்தடையும் வகையில் தனியார் திட்ட ஆலோசகர் நியமனம் செய்யப்பட்டு ரூ. 580.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு கடந்த 31.07.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 680) ஒப்புதல் பெறப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் தமிழக அரசால் வைகை அணையிலிருந்து கூடுதலாக மேலும் 800 கன அடி குடிநீர் எடுத்துக் கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்கு கூடுதலாக 800 கன அடி குடிநீர் கொண்டு வருவதற்கு ரூ.280.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்டவாறு மதுரை மாநகராட்சியின் தற்போதைய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் கூடுதலாக 800 மில்லியன் கன அடி குடிநீர் கொண்டு வருவதற்கு ரூ. 280.00 கோடியினை அரசின் மானியமாக பெற்று பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மான எண்:798</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**4) <u>ம.4/பொ.1/00804/2010</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4 தெருவிளக்கு பிரிவில் புதியதாக மின் கம்பம் அமைப்பதற்கும், புதிய தெருவிளக்குகள் பொருத்துவதற்கும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்கு முன் பணம் தேவைப்படுகிறது. மேலும் மண்டலத்தை சார்ந்த மாநகராட்சி மருத்துவமனைகள், மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் இயங்கும் மின் சாதனங்கள் பழுது நீக்க அத்தியாவசிய மற்றும் அவசர தேவைக்காக மின் உபகரணங்கள் வெளிசந்தையிலிருந்து கொள்முதல் செய்து பொருத்த வேண்டியிருப்பதால் கையிருப்புத் தொகை ரூ.10000/-ஐ (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மண்டலம் –4 தெருவிளக்கு பிரிவின் உதவிமின்பொறியாளர் திரு.R.C. கிருஷ்ண குமார் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>தீர்மான எண்:799</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**5) <u>(ம.பொ.4) ம3 எ13/003709/14</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 74 ல் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனையை சுற்றிலும் தொல்லியல் துறைக்கு சொந்தமான இடத்தில் சுற்றுலாத்துறை நிதி ஒதுக்கீட்டில் மாநகராட்சி மூலம் பூங்கா அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது. தொல்லியல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க மேற்கண்ட பூங்கா சம்பந்தப்பட்ட துறைக்கு ஒப்புடைப்பு செய்யப்பட்டது.

தொல்லியல்துறை பராமரிப்பில் மஹாலைச்சுற்றியுள்ள பூங்காவிற்கு மக்கள் பார்வையிடக்கட்டணம் தொல்லியல் துறை மூலம் வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சி பராமரிப்பு செய்து வந்த முன்புறம் உள்ள பூங்கா வழியாக இலவசமாக மக்கள் தொல்லியல்துறை பராமரிப்பு பூங்கவிற்கு சென்றுவிடுவதால் அன்னாரின் நுழைவு கட்டண வசூல் பாதிக்கப்படுகிறது.

தற்போது பொது மக்களின் முகநூல் (Face Book) புகார் மற்றும் வேண்டுகோளின்படி மேற்கண்ட பூங்காவின் முன்பகுதியை மட்டும் இலவசமாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், தொல்லியல்துறை பூங்காவின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டண பூங்காவின் நுழைவு கட்டண வசூலைப் பாதிக்காத வகையில் பந்தடி 1 வது தெருவில் பூங்காவின் நுழைவு வாயில் மற்றும் தடுப்பு வேலி அமைத்து மாநகராட்சி மூலம் பராமரிப்பு செய்ய தொல்லியல்துறையை கேட்டுக்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:800**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) Jn.S. 2/005364/2013**

Department of Internationl Development – UK நிதியுதவியுடன், மத்திய அரசின் வீட்டு வசதி வாரியம் மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகம் நாற்பது நகரங்களை தேர்வு செய்து முன் மாதிரியான வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நகரங்களில் மதுரை மாநகர் ஒன்றாகும். அதன் அடிப்படையில் “Challenge Fund” என்ற தலைப்பின் கீழ் நிதி வழங்க மேற்படி அமைச்சகம் திட்டமிட்டு, முதற்கட்டமாக மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுகாதார வளாகம் & பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கவும் மற்றும் விழிப்புணர்வு வழங்கவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கடந்த 27.02.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 339) ஒப்புதல் பெறப்பட்டு மேற்கண்ட அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்ள ரூ. 200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை (HUDCO-HSMI/Challenge Fund/2013, நாள். 21.10.2013) வரப்பட்டது. மேற்கண்ட நிதியில் மானியம் 25% சதவீதத் தொகையான ரூ. 62.50 இலட்சம் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு மேற்கண்ட அமைச்சகத்தின் மூலம் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த 20.02.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 586) ஒப்புதல் பெறப்பட்டது. தற்போது 10 இடங்களில் சுகாதார வளாகம் கட்டுவதற்கும் விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கும் ரூ. 200.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக 10 இடங்களில் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க கடந்த 31.07.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 663) ஒப்புதல் பெறப்பட்டும் மதிப்பீடுகள் அனைத்தும் நடப்பாண்டு விலை விகிதம் (2013–14) அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டு ஒரு கட்டிடத்திற்கு ரூ. 24.70 வீதம் 10 இடங்களில் கட்டுவதற்கு ரூ. 247.00 இலட்சம் மற்றும் நிர்வாக செலவீனம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற செலவீனம் ரூ. 12.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ. 259.00 இலட்சத்திற்கு கடந்த 07.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு கடந்த 25.09.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் மாமன்றத் தீர்மானம் எண்.699ன் படி ஒப்புதல் பெறப்பட்டு எட்டு பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

அவ்வாறு வழங்கப்பட்ட வேலை உத்திரவில் மண்டலம் 3, வார்டு எண்.56, இந்திரா நகர் பகுதியில் (ம.பொ.4/ம.எண். 42/14-15) நவீன சுகாதார வளாகம் கட்டுவதற்குண்டான இடம் அரசு புறம்போக்கு பகுதியாகும். இவ்விடத்தில் பட்டா வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கயுள்ளதாக அப்பகுதி பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தற்போது மேற்கண்ட பகுதியில் நவீன சுகாதார வளாகம் கட்டுவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தினால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மண்டலம் 3, வார்டு எண்.60 வள்ளானந்தபுரம் குடிசைப் பகுதியில் சுகாதார வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சுகாதார வளாகத்தினை மாற்றிடத்தில் அமைக்க மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:801**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) மதி 1(ம3)/20837/2014**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு 71, மதுரை தெற்கு வட்டம் கிழக்கு மதுரை கிராமம், சர்வே வார்டு எண் 1A, பிளாக் எண் 8, பழைய நகரளவை எண் 17, புதிய நகர நில அளவை எண் 71-ல் 0.980.0 சதுர மீட்டர் நிலத்தில் B-3 தெப்பக்குளம் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்ய மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் விவாத பொருளாக வைத்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி சர்வே வார்டு எண் 1A, பிளாக் எண் 8, பழைய நகரளவை எண் 17, புதிய நகர நில அளவை எண் 71-ல் 0.980.0 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் B-3 தெப்பக்குளம் காவல்நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சிக்கு சொந்தமான ஊரணி புறம்போக்கு நிலத்தினை காவல்துறைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்புதல் பெற்று இட ஒதுக்கீடு செய்யலாம் என மாமன்ற ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:802**

**நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று, இடஒதுக்கீடு செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) மவ1/ மதி1/10597/13**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்-1 மேல பொன்னகரம் மெயின் ரோடு, தென்றல் திருமண மண்டபக்கட்டிடத்தில் C5 கரிமேடு காவல் நிலையம் மாத வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது.

கரிமேடு காவல் நிலையத்திற்கு சொந்தமாக கட்டிடம் கட்ட காவல் நிலைய எல்லைக்குள் உரிய இடம் இல்லாததால் கரிமேடு காவல் நிலையம் இயங்கி வரும் தென்றல் திருமண மண்டபம் கட்டிடத்தை 99 வருட குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய மதுரை மாநகர காவல் ஆணையர் அவர்கள் கோரியுள்ளார்.

அரசாணை நிலை எண்.92 ந.நி.ம.கு.வ.துறை நாள்:03.07.2007ன்படி மாநகராட்சி சொத்துக்களை ஒரு நேரத்தில் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்றாண்டு முடிவடைந்தபின் குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும். ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்ட குத்தகை விகிதத்தில் மேற்கண்ட ஒன்பது ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்து கொள்ள அனுமதிக்கப்படும்.

மாத வாடகை பொதுபணி துறை விலை விகிதம், சந்தை மதிப்பு இதில் எது அதிகமோ அந்த அடிப்படையில் மாத வாடகை நிர்ணயம் செய்யப்படும்.

எனவே மண்டலம்-1 மேல பொன்னகரம் மெயின் ரோடு, தென்றல் திருமண மண்டபம் கட்டிடத்தை C5 கரிமேடு காவல் நிலையம் பயன்பாட்டிற்கு காவல் துறைக்கு ........ வருட குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:803**

**மதுரை மாநகராட்சியின்நிபந்தனைக்குட்பட்டு காவல்துறைக்கு 9(ஒன்பது) வருடங்களுக்கு மட்டும் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) மநி 4/032089/2012**

மதுரை மாநகராட்சியில் அலோபதி மருத்துவ அலுவலராக பணிபுரிந்து 31.01.2012ல் பணி ஓய்வு பெற்ற மருத்துவர் A.சிவகுருநாதன், மருத்துவ அலுவலராக 10.03.1989 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து **20** ஆண்டுகள் பணிபுரிந்துள்ள நிலையில், அரசு ஆணை எண்.**583,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப**3**) துறை, நாள் : **26.11.2010**–ன்படி

சம்பளமில்லா விடுப்பு நீக்கி **20** ஆண்டுகள் பணி **26.07.2010**ல் பூர்த்தியடைந்தாலும், அரசாணை பிறப்பிக்கப்பட்ட நாள் **: 26.11.2010** முதல் முதன்மை மருத்துவ அலுவலர் (Chief Medical Officer) என பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு (Time Bound Promotion with Pay Hike) வழங்கி 37400-67000+GP 8700 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:804**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) மநி1/36797/2014**

மதுரை மாநகராட்சி வழக்குகள், மாநகராட்சி வழக்கறிஞர்களால் நீதிமன்றத்தில் நடத்துவதை கண்காணிக்கவும், அதற்கு தகுந்த ஆவணங்கள் வழங்கவும், மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறவும் மதுரை மாநகராட்சியில் ஒரு சட்ட அலுவலர் பணியிடம் உள்ளது . மேற்படி சட்ட அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது . மேற்படி சட்ட அலுவலர் பணியிடத்திற்கு பணிவிதிகளில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது .

1) மாநகராட்சி சார்நிலை பணியில் உள்ள கண்காணிப்பாளர் பணியிடத்திலிருந்து பணிஉயர்வு மூலம் நிரப்ப

By promotion from the holder of the post of Superintendent of the Corporation General Subordinate Service (or) By Transfer from the holder of the post of Council Secretary என உள்ளது .

2) சட்ட அலுவலர் பணியிடத்திற்கான கல்வித்தகுதி ஒரு சட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும் அல்லது அதற்கு சமமான பட்டப்படிப்பு இருக்க வேண்டும் . (By promotion must have a degree in Law or equalent degree)

மேற்கண்ட பணிவிதிகளின்படி மாநகராட்சி பணியாளர்களில் சட்டம் பயின்றவர்களில் திருமதி. R. சிவபாக்கியம் ஒருவர் மட்டுமே கண்காணிப்பாளர் பதவியில் பணியாற்றி வருகிறார். இவர் கல்வித்தகுதியாக B.Com, L.L.B., M.C.A., L.L.M. பயின்றுள்ளதற்கான பதிவுகள் பணிபதிவேட்டில் உள்ளது .இவர் L.L.B. 3 ஆண்டு பட்டப்படிப்பை பெங்களூரில் உள்ள அல்–அமீன் சட்டக் கல்லூரியில் பயின்றுள்ளார். L.L.M. சட்ட முதுகலை படிப்பை அலுவலக அனுமதியுடன் அண்ணாமலை பல்கலை கழகத்தில் பயின்றுள்ளார். L.L.B. படிப்பிற்கு தேர்வு எழுதும் பொழுது ஈட்டிய விடுப்பு பெற்று சென்றதற்கான பதிவுகளும் L.L.M. படிக்க உத்தரவு பெற்றதும் L.L.B. மற்றும் L.L.M. தேர்ச்சி பெற்ற பதிவுகளும் பணிபதிவேட்டில் உள்ளன. ஏற்கனவே மாமன்ற தீர்மானம் எண் 248 நாள் 1–8–2005ல் திரு மு.சவரிமுத்து , வரித்தண்டலர், 2. திரு ராஜ்–மீட்டர் ரீடர், 3. திருமதி சிவபாக்கியம்–உதவியாளர், 4. திரு லலித்ராஜ் –டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் ஆகிய நால்வர் பணிமுதிர்ச்சி பட்டியலில் வைக்கப்பட்டனர். பணிமுதிர்ச்சி பட்டியல் வெளியிடும் போது கண்காணிப்பாளர் பதவியில் ஒருவரும் இல்லாததால் பணிமூப்பு அடிப்படையில் திரு மு.சவரிமுத்து மற்றும் திரு எ.ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பதவி மட்டுமே காலியாக இருந்த காரணத்தால் பணிமூப்பில் முதல் நபரான திரு மு.சவரிமுத்து என்பவர் கண்காணிப்பாளராக இல்லாமல் வருவாய் உதவியாளராக பணியாற்றியதால் சட்ட அலுவலர் பணியிடம் வழங்க விதிகளை தளர்த்தி, தக்க தளர்வாணை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் விதிகளை தளர்த்தி திரு சவரிமுத்து என்பவரை சட்ட அலுவலராக பதவி உயர்வு வழங்க இயலாது என அரசால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.. பணிமூப்பில் இரண்டாவது நபரான திரு எ.ராஜ் காலமாகி விட்டார். மூன்றாவது நபரான திருமதி R. சிவபாக்கியம் மட்டுமே சட்ட அலுவலர் பணியிடத்திற்கான (Feeder Category) ஆன கண்காணிப்பாளர் பதவியில் உள்ளார். பணிவிதிகளில் கல்வித் தகுதியாக ஏதேனும் ஒரு சட்டபடிப்பு என உள்ளது.. இவர் துறை அனுமதியின்றி L.L.B. படித்தாலும் அதற்கு மேல் L.L.M. பயில துறை அனுமதித்துள்ளது . இதனை கருத்தில் கொண்டு L.L.B கல்வி பயின்றதை பின்னேற்பு செய்யலாம். L.L.M. பயின்றுள்ளதால் திருமதி R.சிவபாக்கியத்தை சட்ட அலுவலராக நியமிக்க ஒப்புதல் வழங்கவும் இதனை அரசின் பின்னேற்புக்கு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:805**
**திருமதி.R.சிவபாக்கியம் L.L.B.கல்விப்பயின்றதை பின்னேற்பு செய்தும்,L.L.M.பயின்றுள்ளதால் சட்ட அலுவலராக நியமிக்க ஒப்புதல் வழங்கியும், இதனை அரசின்பின்னேற்புக்கு அனுப்பவும் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) H1/000753/12**

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மகப்பேறு மருத்துவமனைகள் 17 மற்றும் நலவாழ்வு மையங்கள் 17 ஆகியவற்றில் பரிசோதனைகளுக்கு வரும் ரத்த சோகை உள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டும், பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியத்தை முன்னிட்டும் **Blood transfusion & Intra venous Iron therapy by Iron sucrose-** சிகிச்சைக்கு தேவைப்படும் மருந்துகள் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் **T.N.M.S.C.** யில் இல்லாததால் (மகப்பேறுமனைகளின் கண்காணிப்பாளர்கள் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு) ¼ ஆண்டிற்கு ரூ.**30,39,600/-** (ரூபாய் முப்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூறு) என்ற வீதத்தில் ஒருவருட காலத்திற்கு ரூ.**1,21,58,400/-** (ஒரு கோடியே இருபத்தொரு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து நானூறு) செலவில் மேற்கண்ட மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தனியார் நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:806**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) H1/8605/12**

மதுரை மாநகராட்சி திரவியம் பிள்ளை (D.T.P.) மருந்தகத்தில் உள்ள X Ray Unit-க்கு தேவைப்படும் பொருட்களை (X Ray Film, Developer, Fixer, Marker etc.,) வாங்குவதற்கு சில்லரை செலவினத்திற்காக (Imprest) ரூ.5000/- ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலருக்கு முன்பணமாக வழங்குவது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:807**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) ம.பொ.4/019134/2014**

மதுரை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தில் பணியிடங்கள் தோற்றுவித்தும் அதற்கான செலவினத்தை மத்திய அரசின் திட்டமான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் ஈடுகட்ட அரசாணை (2டி) எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் வரிசை எண்.13ல் நகரத்திட்ட அலுவலர் பணியிடம் ஒன்று ரூ.8000-275-13500 என்ற ஊதிய விகிதத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அலுவலர் பணிகளில் திடக்கழிவு மேலாண்மை பணியில் கையாளுதல் மற்றும் மேலாண்மைப் பணிகள் முக்கியமான பணிகளாகும். மதுரை மாநகர் 100 வார்டுகளாக விஸ்தரிக்கப்பட்ட நிலையில் நாள் ஒன்றுக்கு சேரும் சுமார் 650 மெட்ரிக் டன் குப்பையை திடக்கழிவு (கையாளுதல் மற்றும் மேலாண்மை) விதிகள் 2000ல் (Solid Waste Management Rules 2000) தெரிவித்துள்ளபடி செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இப்பணியில் நாள்தோறும் சுமார் 4000 சுகாதார பணியாளர்கள் 150 எண்ணிக்கையில் பல்வேறு வகையான வாகங்கனங்களின் மூலம் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் தினந்தோறும் கூடுதல் குப்பைகள் சேரும் பகுதிகளைக் கண்டறிந்து உடனுக்குடன் அவற்றை கூடுதல் வாகனம் கொண்டு அப்புறப்படுத்தப்பட வேண்டியுள்ளது. மதுரை மாநகராட்சியில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் மத்திய பொது மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்

நிறுவனத்தின் (Central Public and Environmental Engineering Organisation) வழிகாட்டு நெறிமுறைகளின்படி மதுரை மாநகராட்சி தனியார் நிறுவனத்துடன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து Madurai Municipal Waste Processing Company Private Limited (MMWPCPL) என்ற நிறுவன அமைப்பின் மூலம் திடக்கழிவுகளிலிருந்து நவீன தொழில்நுட்ப அடிப்படையில் உரமாக மாற்றப்பட்டு பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நகரிலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவுகளில் மறுசுழற்ச்சி செய்வதற்காக மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு உரமாக மாற்றி திடக்கழிவு சேமிப்புக் கிடங்கில் சேமிக்கப்படுகிறது. அவ்வாறு தயாரிக்கப்பட்டு சேமிக்கப்படும் உரமானது விவசாய பணிக்கு பயன்படுகிறது. இதன்மூலம் தினந்தோறும் 400 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் இந்த உரக்கிடங்கில் கையாளப்படுகிறது. பிளாஸ்டிக் கழிவுகளும் தனியே பிரிக்கப்பட்டு மறுசுழற்ச்சி செய்யப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை பணியில் முதல்நிலை கையாளுதல் பணியான சேகரித்தல் (Primary Collection ) பொதுசுகாதாரப் பணியாளர்களைக் கொண்டும் இரண்டாம் கட்ட மேலாண்மை பணிகள் (Secondary Collection) பொறியியல் பிரிவு பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் தேர்ச்சியும் அனுபவமிக்க பணியாளரைக் கொண்டு அபிவிருத்தி செய்யும் நிலையில் மேற்படி பணியை மிகவும் சிறப்பாக செயல்படுத்தலாம். மேலும் நகர திட்ட அலுவலர் பணியிடம் தற்பொழுது மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ளது. இத்திட்டத்திற்கான செலவினத்தை JnNurm இத்திட்டத்தில் ஈடு செய்வதற்கு அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.அ.இளையராஜா திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமான முதுநிலைப்பட்டயக் கல்வியில் தேர்ச்சி பெற்று தகுதியானவராக உள்ளார். மேலும் அன்னார் கீழ்க்கண்ட கூடுதல் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளார்.

1. B.Sc. Applied Chemistry Graduate Degree.
2. Post Graduate Diploma in Solid Waste Management.

மேற்கண்ட கல்வித்தகுதிகளுடன் திடக்கழிவு மேலாண்மை பணியில் 10 ஆண்டு கால பணி அனுபவமிக்கவராக உள்ளார். இவர் தற்பொழுது சுகாதார ஆய்வாளர் பணியில் ரூ.9300-34800- GP 4400 என்ற ஊதிய விகிதத்தில் தற்பொழுது மாதம் ரூ.16200+4400 தர ஊதியம் பெற்று மண்டலம் எண் 3 அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணியிடமான நகர திட்ட அலுவலர் பணியிடத்திற்கு தற்பொழுது ஊதியக்குழு ஊதிய விகிதமான ரூ.15600-39100- GP 5400 என்ற ஊதியத்தில் உள்ளதாலும், இப்பணியிட பணி நியமனத்திற்கு பணி விதிகள் எதுவும் வெளியிடப்படாத நிலையில் மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் திரு.அ.இளையராஜா சுகாதார ஆய்வாளர் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதுநிலை பட்டயப்படிப்பும், 10 ஆண்டு கால பணி அனுபவமிக்கவராக உள்ளதால் அன்னாரை ஜவஹர்லால் நேரு நகர்ப்பற புனரமைப்பு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணியிடமான நகர திட்ட அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்ய உரிய கல்வித் தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாலும், அன்னாரை மதுரை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் JnNurm திட்டத்தில் நகர திட்ட அலுவலராக பணி நியமனம் செய்வதற்கு அரசின் ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய பிரேரணைகள் அனுப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:808**

**திரு.அ.இளையராஜா, சுகாதார ஆய்வாளர், என்பவரை நகர திட்ட அலுவலராக பணி நியமனம் செய்வதற்கு அரசின் ஒப்புதல்பெற நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14)மபொ1.மநி.12/000478/2012**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco-Chennai,The Government of Tamilnadu Undertaking) பணியாளர்கள் கீழ்கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1. ஆணையாளர் அவர்களின் காவலர் (Security Guard) | : | 1 |
| 2. லாரி ஸ்டாண்ட் (பொறியியல் பிரிவு) ஓட்டுநர்கள் (Driver) | : | 3 |
| 3. லாரி ஸ்டாண்ட் (சுகாதாரப் பிரிவு) ஓட்டுநர்கள் (Driver) | : | 3 |
| 4. லாரி ஸ்டாண்ட் மெக்கானிக் & எலக்ட்ரிசியன்கள் | : | 8 |
| 5. லாரி ஸ்டாண்ட் காவலர்கள் (Security Guards) | : | 4 |
| 6. ராஜாஜி குழந்தைகள் பூங்கா எலெக்ட்ரானிக் மெக்கானிக் | : | 1 |
| 2. ஈகோ பார்க் காவலர்கள் (Security Guards) | : | 7 |
| 8. வெள்ளக்கல் காவலர்கள் (Security Guards) | : | 2 |
| **மொத்த பணியாளர்கள்** | : | **29** |

அரசு ஆணை எண்.1740 நாள் :05.11.2007 Public (Ex-servicemen) Department TEXCO பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் பேரில் கீழ்கண்டவாறு 01.04.2014 முதல் திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யவும், 31.03.2015 வரை ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்ய வேண்டியது.

| வ.எண் | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம்(ரூபாய்) | 01.04.2014 முதல் வழங்க வேண்டிய ஊதியம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | காவலர் | 9,958 | 10,906 |
| 2 | மெக்கானிக் | 11,294 | 12,242 |
| 3 | ஓட்டுநர் | 11,294 | 12,242 |
| 4 | தலைமை காவலர் | 11,294 | 12,242 |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவை கட்டணம் 12%, சேவை வரி 12.36%, வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:809**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15)CW3 /1100/2012**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு.யு.வி.மீனாட்சிசுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால், ஏற்கனவே வழங்கி வரும் சேவை கட்டணம் அடிப்படையில் 01.10.2014 முதல் 30.09.2015 வரை மேலும் ஓராண்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக டெக்ஸ்கோ பணியாளரின் சேவையை பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1) ஏற்கனவே **30.09.2014** முடிய சேவை செய்யவும் அதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத் தீர்மான எண்.**570**, நாள்: **31.01.2014–**ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

2) **01.10.2014** முதல் ஒரு வருடத்திற்கு மேற்கண்ட சேவையை நீட்டிப்பு செய்து கொள்ள ஒப்பந்தப்பத்திரம் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

3) **01.10.2014** முதல் **30.09.2015** வரை சேவைக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு **ரூ.11,294/-** மற்றும் வரிகள் உட்பட **ரூ.14,213/-** வீதம் ஒரு வருடத்திற்கு தொடர்ந்து வழங்கலாம்.

**தீர்மான எண்:810**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16) மநி.9/34167/2014**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான தமுக்கம் மைதானத்திலுள்ள சுவாமி சங்கரதாஸ் கலையரங்கத்தில் **16.11.2014** அன்று **61**வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா நிகழ்ச்சி சலுகை கட்டணத்தில் நடத்தியதற்கு அவசர அவசியத்தைக் கருத்திற்க்கொண்டு இதை சிறப்பினமாக கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்புக்கு தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:811**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 02.01.2015**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2015-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 9-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) மவ2/029762/14**

மதுரை மாநகராட்சி, டாக்டர் தங்கராஜ் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி நீச்சல் குளத்தை பராமரிக்க M/S. Foundation Of Occupational Development(Food) சென்னை என்ற நிறுவனத்திற்கு 15.10.2011 முதல் 14.10.2014 வரை உள்ள தொகுப்பு ஆண்டிற்கு மாத உரிமம் கட்டணம் ரூ.20000/- என்று நிர்ணயம் செய்து ஒவ்வொரு ஆண்டும் 15% உயர்வு செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது மாத வாடகை ரூ.26450/- செலுத்தப்பட்டு வருகிறது.

தற்போது 15.10.2014 முதல் மாத வாடகை ஏற்கனவே செலுத்தி வரும் மாத வாடகை தொகையிலிருந்து 15% உயர்வு செய்து ரூ.31000/- என நிர்ணயிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் 15% உயர்வு செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மாநகராட்சி நீச்சல் குளத்தை பராமரிக்க M/S. Foundation Of Occupational Development(Food) சென்னை என்ற நிறுவனத்திற்கு நிபந்தனை அடிப்படையில் அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரி 12.11.2014 நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது மீண்டும் மாமன்றத்தின் கருத்தினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:812**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) ம. பொ. 1/ ம.எண். 1 (I&A) /2014**

மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் நகரின் மையப் பகுதியில் வெளியூர் செல்லும் பேருந்துகள் வந்து செல்வதால் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டும் நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் கீழ் நிதி மானியம் பெற்று திருமலைராயர் படித்துறை மற்றும் அருள்தாஸ்புரம் பகுதிகளில் உயர்மட்ட பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தனியார் திட்ட ஆலோசகர் மூலம் ரூ.30.40 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு கடந்த 04.09.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 471) ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (அரசாணை எண். 62, நாள். 26.05.14) மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டு ESI மருத்துவமனை முதல் ஆரப்பாளையம் வரை (அருள்தாஸ்புரம்) உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ரூ. 15.86 கோடிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப ஒப்புதல் (ந.க.எண். 17906/2014/DO 1, நாள். 08.07.2014) மற்றும் கடந்த 31.07.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 645) ஒப்புதல் பெறப்பட்டு 18.08.2014 அன்று

ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. P.K. Mookanambalam & Co., No. 21, Jawahar Street, Gandhi Nagar, Madurai.
2) Mr.G. Nageswaran, No. 29/192, Vettri Vinayakar Kovil Street, Thirumangalam, Chennai.
3) M/s. P & C Construction (P) Ltd., No. 140, Perundurai Road, Erode.
4) M/s. RCM Infrastructure Ltd., No. 8-2-632/5, India Chambers 2nd Floor Avenue 4, Hydreabad.

மேற்கண்டவாறு வரப்பெற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் **18.08.2014** அன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முன் திறக்கப்பட்டு **26.08.2014** அன்று ஒப்புநோக்கு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதன் பேரில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் மட்டும் தொழில்நுட்ப தகுதி வாய்ந்துள்ளன என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. P.K. Mookanambalam & Co., Madurai.
2) M/s. RCM Infrastructure Limited, Hydreabad.

மேற்கண்டவாறு இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் கடந்த **12.09.2014** அன்று தொழில்நுட்ப குழுவின் முன் திறக்கப்பட்டு விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. P.K. Mookanambalam & Co., - மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 62.48% அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது.
2) M/s. RCM Infrastructure Ltd., - மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 58.93% அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், M/s. RCM Infrastructure Limited, Hydrebad என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 58.93% அதிகமாக கொடுக்கப்பட்ட விலை விகிதம் தொழில்நுட்ப குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் கடந்த **16.09.2014** அன்று ஆணையாளர் அவர்களின் தலைமையில் L 1 நிறுவனமான M/s. RCM Infrastructure Limited, Hydrebad நிறுவனத்துடன் முதற்கட்ட பேச்சுவார்த்தை (Negotiation of Rates) நடத்தப்பட்டதில் இந்நிறுவனத்தார் தெரிவித்த தொகை 2014-15ம் ஆண்டு விலை விகிதத்தினை விட 27.44% அதிகமாக உள்ளது.

இந்நிலையில் கடந்த **19.09.2014** அன்று ஆணையாளர் அவர்களின் தலைமையில் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை (Negotiation of Rates) நடத்தப்பட்டதில் இந்நிறுவனத்தார் 2014-15ம் ஆண்டு விலை விகிதத்தினை விட 19.54% அதிகமாக தெரிவித்தது.

மேற்கண்ட நிறுவனத்தின் விலை விகிதம் 2014-15ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 19.54% அதிகம் உள்ளதை மாநில தொழில் நுட்ப குழுவிற்கு (State Level Nodel Agency) பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த **24.11.2014** அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மேலும் விலை குறைப்பு செய்யக் கோரி கடிதம் வரப்பெற்றது. அதன் அடிப்படையில் மீண்டும் இந்நிறுவனத்திடம் மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை செய்யப்பட்டது. தற்போது தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களால் அனுமதி வழங்கப்பட்ட **2014–15ம்** ஆண்டு விலை விகிதத்தினை விட 14.97% கூடுதலாக செய்து தருவதற்கு இந்நிறுவனம் **28.11.2014** அன்று கடிதம் வழங்கியது. மேலும் இவ்விலை விகிதத்தினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாநில தொழில் நுட்ப குழுவிற்கு (State Level Nodel Agency) பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து **22.12.2014** அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு கூட்டத்தில் (Tender Award Committee) மாநகராட்சி ஆணையாளர் மற்றும் நகரப் பொறியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துரு முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு, மேற்கண்ட நிறுவனம் அளித்துள்ள மூன்றாம் விலை விகிதமான 14.97% **2014–15ம்** ஆண்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக அளித்துள்ள விலை விகித்ததிற்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு (Tender

Award Committee) ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே அதன் அடிப்படையில் இப்பணியினை மேற்கண்ட M/s. RCM Infrastructure Limited, Hydrebad நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:813**

**பொருளில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 3) ம. பொ. 4/ ம.எண். 2 (I&A) /2014

மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும் நகரின் மையப் பகுதியில் வெளியூர் செல்லும் பேருந்துகள் வந்து செல்வதால் ஏற்படும் இடையூறுகளை தவிர்க்கும் பொருட்டும் நகர் மற்றும் ஊரகத் திட்டத் (Town and Country Planning) துறையின் கீழ் நிதி மானியம் பெற்று திருமலைராயர் படித்துறை மற்றும் அருள்தாஸ்புரம் பகுதிகளில் உயர்மட்ட பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தனியார் திட்ட ஆலோசகர் மூலம் ரூ.30.40 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு கடந்த 04.09.2013 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 471) ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (அரசாணை எண். 62, நாள். 26.05.14) மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டு சிம்மக்கல் சாலை முதல் கோரிப்பாளையம் சாலை வரை (திருமலைராயர் படித்துறை) உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ரூ. 13.64 கோடிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தொழில்நுட்ப ஒப்புதல் (ந.க.எண். 17906/2014/DO 1, நாள். 08.07.2014) மற்றும் கடந்த 31.07.2014 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்றத் தீர்மானம் எண். 645) ஒப்புதல் பெறப்பட்டு 18.08.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. Dharsan and Co., No. 583, Anna Nagar 2nd East Main Road,Madurai.
2) Mr.G. Nageswaran, No. 29/192, Vettri Vinayakar Kovil Street, Thirumangalam, Chennai.
3) M/s. M.R.Hi Tech Engineers Pirvate Ltd.,Ramnathapuram.
4) M/s. RCM Infrastructure Ltd., No. 8-2-632/5, India Chambers 2nd Floor Avenue 4, Hydreabad.

மேற்கண்டவாறு வரப்பெற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் 18.08.2014 அன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முன் திறக்கப்பட்டு 26.08.2014 அன்று ஒப்புநோக்கு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டதன் பேரில் கீழ்க்கண்ட நிறுவனம் மட்டும் தொழில்நுட்ப தகுதி வாய்ந்துள்ளன என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. RCM Infrastructure Limited, Hydreabad.

மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி கடந்த 12.09.2014 அன்று தொழில்நுட்ப குழுவின் முன் திறக்கப்பட்டு விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

1) M/s. RCM Infrastructure Limited - மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 57.56% அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், M/s. RCM Infrastructure Limited, Hydrebad என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 57.56% அதிகமாக கொடுக்கப்பட்ட விலை விகிதம் தொழில்நுட்ப குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும் கடந்த 16.09.2014 அன்று ஆணையாளர் அவர்களின் தலைமையில் L 1 நிறுவனமான M/s. RCM Infrastructure Limited, Hydrebad நிறுவனத்துடன் முதற்கட்ட

பேச்சுவார்த்தை (Negotiation of Rates) நடத்தப்பட்டதில் இந்நிறுவனத்தார் தெரிவித்த தொகை 2014-15ம் ஆண்டு விலை விகிதத்தினை விட 25.85% அதிகமாக உள்ளது.

இந்நிலையில் கடந்த **19.09.2014** அன்று ஆணையாளர் அவர்களின் தலைமையில் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை (Negotiation of Rates) நடத்தப்பட்டதில் இந்நிறுவனத்தார் 2014-15ம் ஆண்டு விலை விகிதத்தினை விட 17.63% அதிகமாக தெரிவித்தது.

மேற்கண்ட நிறுவனத்தின் விலை விகிதம் 2014-15ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 17.63% அதிகம் உள்ளதை மாநில தொழில் நுட்ப குழுவிற்கு (State Level Nodel Agency) பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த **24.11.2014** அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மேலும் விலை குறைப்பு செய்யக் கோரி கடிதம் வரப்பெற்றது. அதன் அடிப்படையில் மீண்டும் இந்நிறுவனத்திடம் மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை செய்யப்பட்டது. தற்போது தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களால் அனுமதி வழங்கப்பட்ட **2014–15ம்** ஆண்டு விலை விகிதத்தினை விட 14.98% கூடுதலாக செய்து தருவதற்கு இந்நிறுவனம் **28.11.2014** அன்று கடிதம் வழங்கியது. மேலும் இவ்விலை விகிதத்தினை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாநில தொழில் நுட்ப குழுவிற்கு (State Level Nodel Agency) பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து **22.12.2014** அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு கூட்டத்தில் (Tender Award Committee) மாநகராட்சி ஆணையாளர் மற்றும் நகரப் பொறியாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துரு முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு மேற்கண்ட நிறுவனம் அளித்துள்ள மூன்றாம் விலை விகிதமான 14.98% **2014–15ம்** ஆண்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக அளித்துள்ள விலை விகித்ததிற்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் குழு (Tender Award Committee) ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே அதன் அடிப்படையில் இப்பணியினை மேற்கண்ட M/s. RCM Infrastructure Limited, Hydrebad நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:814**

**பொருளில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ5/34439/14**

மதுரை மாநகராட்சியின் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பணிகளான குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகள், கட்டிட இடிபாடுகளை அகற்றுதல், சாலையோரங்களில் உள்ள மண் குவியல்களை அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு நான்கு எண்ணம் மண் அள்ளும் இயந்திரம் (Backhoe Loader) வாகனங்கள் ஏற்கனவே வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மாநகராட்சியானது **100** வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள நான்கு வாகனங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக இரண்டு எண்ணம் வாகனங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளுர் சந்தை விலை விகிதத்தின் அடிப்படையில் கொட்டேசன் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வாகனம் ஒன்றுக்கு உத்தேச மதிப்பீடு ரூ. **27,07,500/-** வீதம் இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ. **54,15,000/-** ஆகும். எனவே மேற்கண்ட வாகனத்தின் அத்தியாவசியத்தினைக் கருத்தில் கொண்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் வாங்குவதற்கு ஒப்புதல் வேண்டியும் உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:815**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) <u>ம. பொ. 1/ 34440 /2014</u>**

மதுரை மாநகராட்சியின் மைய வாகன பராமரிப்பு நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு தற்போது அடிக்கடி பழுது ஏற்பட்டும் பராமரிப்பு செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனவே இவ்வாகனங்களை உடனடியாக ஏலம் மூலம் கழிதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வாகன விபரம் பின்வருமாறு:

| வ. எ ண். | வாகனம் எண் | வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு | Model | வாகனம் உபயோகப்படுத்தப்பட்டு வரும் வருடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | TN 59 5761 | 1990 | Mahindra Jeep | 24 வருடம் |
| 2. | TNU 7677 | 1974 | Ambassdor Car | 40 வருடம் |
| 3. | TNA 3773 | 1978 | Ambassdor Car | 36 வருடம் |
| 4. | TN 59 M 1234 | 1996 | Ambassdor Car | 18 வருடம் |
| 5. | TN 59 L 0005 | 1999 | Ambassdor Car | 15 வருடம் |
| 6. | TN 59 M 2002 | 1999 | Ambassdor Car | 15 வருடம் |
| 7. | TN 59 B 0068 | 1998 | Mahindra Commandor | 16 வருடம் |
| 8. | TN 59 J 4708 | 1997 | Armada | 17 வருடம் |
| 9. | TN 59 J 4709 | 1997 | Armada | 17 வருடம் |
| 10. | TN 59 J 4710 | 1997 | Armada | 17 வருடம் |
| 11. | TN 59 J 4711 | 1997 | Armada | 17 வருடம் |
| 12. | TN 59 M 9056 | 2000 | Omni | 15 வருடம் |

மேலும் மேற்கண்ட 12 வாகனங்களையும் கழிதல் செய்வதால் அவ்வாகனங்களுக்கு பதிலாக புதிதாக 12 வாகனங்களை வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு சிறப்பு அரசு விலை விகிதத்தின் படி (Special Government Rate) வாகனம் ஒன்றுக்கு ரூ. 5,40,001/- ஆக மொத்தம் 12 வாகனங்களுக்கு ரூ. 64,80,012/- ஆகும். எனவே மேற்கண்ட வாகனங்கள் சிறப்பு அரசு விலை விகிதத்தின் அடிப்படையில் வாங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>தீர்மான எண்:816</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**6) <u>ம.பொ. 4/ TURIP 1 /14–15</u>**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் விடுப்பட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்புகள் ஏற்படுத்த வேண்டி ஆங்காங்கே சாலைகள் தோண்டப்பட்டது. அவ்வாறு தோண்டப்பட்ட சாலைகளை சீரமைக்க வேண்டி முதற்கட்டமாக 18.335 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 887.50 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மாநகராட்சியின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு ''தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் 2014–

15ன்'' கீழ் மானியமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 1 | 5 | தார் சாலை | நேதாஜி சாலையில் தார் சாலை அமைத்தல் | 500.00 | 6.00 | 28.00 |
| 3 | 6 | பேவர் பிளாக் சாலை | ஜீவா தெரு, சித்தா பாசு தெரு, எலி அய்யனார் கோவில் மற்றும் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 490.00 | 5.00 | 24.20 |
| 4 | 7 | பேவர் பிளாக் சாலை | நாகம்மாள் கோவில் தெரு, ரங்கராஜன் தெரு மற்றும் அய்யாவு தேவர் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 290.00 | 6.00 | 21.60 |
| 5 | 8 | தார் சாலை | பெரியார் 3வது தெரு, மீனாட்சி நகர், அன்னை தெரு மற்றும் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 545.00 | 6.00 | 20.00 |
| 6 | 9 | பேவர் பிளாக் சாலை | காமாட்சி நகர் 1வது, 2வது தெரு, பைபாஸ் சர்வீஸ் சாலை பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 260.00 | 4.50 | 11.25 |
| 7 | 11 | தார் சாலை | புட்டுத் தோப்பு மைதானம் தெருவில் தார் சாலை அமைத்தல் | 205.00 | 6.00 | 18.00 |
| 8 | 12 | பேவர் பிளாக் சாலை | யோகானந்தா சாமி தெற்கு மடம் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 185.00 | 6.00 | 12.70 |
| 9 | 15 | தார் சாலை | விஸ்வாசபுரி 1வது மற்றும் 3வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 613.00 | 6.00 | 26.00 |
| 10 | 16 | தார் சாலை | STC மெயின் சாலை மற்றும் முனியாண்டி கோவில் குறுக்குத் தெருக்களில் தார் | 226.00 | 6.00 | 10.00 |

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| | | | சாலை அமைத்தல் | | | |
| 11 | 17 | தார் சாலை | எல்லீஸ் நகர் விரிவாக்கம் மற்றும் எம் டைப் ரோடு பகுதிகளில் தார் சாலை அமைத்தல் | 380.00 | 6.00 | 20.00 |
| 12 | 18 | தார் சாலை | ராஜா முத்தையா நகர் மற்றும் SBI காலனி 1வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 264.00 | 6.00 | 15.00 |
| 13 | 19 | தார் சாலை | ராஜம் நகர் மெயின், 1வது மற்றும் 2வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 490.00 | 5.00 | 20.00 |
| 14 | 20 | தார் சாலை | தில்லை நகர் மற்றும் ஒத்தக்கடை தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 333.00 | 5.00 | 12.50 |
| 15 | 21 | தார் சாலை | காமராஜர் 1வது தெரு மற்றும் திருவள்ளுவர் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 246.00 | 5.00 | 20.00 |
| 16 | 22 | தார் சாலை | தாமிரபரணி தெரு, சிருவாணி தெரு மற்றும் கங்கை தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 335.00 | 5.00 | 15.00 |
| 17 | 27 | தார் சாலை | கணேஷ் நகர் 1வது முதல் 5வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 465.00 | 6.00 | 19.40 |
| 18 | 34 | தார் சாலை | செண்பக தோட்டம் சாலையில் தார் சாலை அமைத்தல் | 224.00 | 8.50 | 15.00 |
| 19 | 36 | பேவர் பிளாக் சாலை | கட்டில்கார மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 497.00 | 2.50 | 12.00 |
| 20 | 37 | தார் சாலை | R.S. நாயுடு தெருவில் தார் சாலை அமைத்தல் | 190.00 | 6.00 | 12.10 |

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 21 | 37 | பேவர் பிளாக் சாலை | காளியம்மன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 95.00 | 4.50 | 4.50 |
| 22 | 39 | பேவர் பிளாக் சாலை | பத்து நோன்பு சாவடி 1வது தெரு மற்றும் பெருமாள் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 183.00 | 3.00 | 7.25 |
| 23 | 39 | தார் சாலை | முகமதியார் தெரு மற்றும் மாரியம்மன் கோவில் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 95.00 | 6.50 | 4.60 |
| 24 | 40 | தார் சாலை | பாண்டியன் தெருவில் தார் சாலை அமைத்தல் | 150.00 | 6.50 | 20.00 |
| 25 | 41 | தார் சாலை | புலித்தேவன் தெரு மற்றும் சோழன் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 327.00 | 5.50 | 18.00 |
| 26 | 46 | தார் சாலை | லூர்து நகர் முதல் ராஜீவ் காந்தி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 315.00 | 4.00 | 11.50 |
| 27 | 47 | பேவர் பிளாக் சாலை | வண்டிப்பாதை கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 167.00 | 8.00 | 18.50 |
| 28 | 51 | பேவர் பிளாக் சாலை | அருணாச்சலபுரம் 1வது,2வது,3வது மற்றும் 5வது தெருக்களில் மற்றும் இஸ்மாயில்புரம் 19வது,6வது (பகுதி) 8வது (பகுதி), 10வது (பகுதி) ஆகிய பகுதகிளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 786.00 | 4.00 | 20.00 |
| 29 | 52 | பேவர் பிளாக் சாலை | இராசாயனபட்டறை மெயின் தெரு, தூமாட்டி அய்யனார் தெரு மற்றும் மீனாட்சிபுரம் 5வது தெருக்களில் பேவர் | 443.00 | 5.50 | 20.00 |

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| | | | பிளாக் சாலை அமைத்தல் | | | |
| 30 | 53 | தார் சாலை | வெங்கடராஜீலு நாயுடு தெருவில் தார் சாலை அமைத்தல் | 84.00 | 5.00 | 5.20 |
| 31 | 54 | தார் சாலை | வள்ளலார் தெருவில் தார் சாலை அமைத்தல் | 295.00 | 6.00 | 16.75 |
| 32 | 63 | பேவர் பிளாக் சாலை | வில்லாபுரம் அன்னை 1வது தெரு, பாரதியார் மெயின் குறுக்குத் தெரு மற்றும் அன்பு நகர் விரிவாக்கம் பகுதிகளில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 465.00 | 3.00 | 18.50 |
| 33 | 64 | தார் சாலை | ராணி பொன்னம்மாள் 2வது மற்றும் 3வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 359.00 | 8.00 | 20.10 |
| 34 | 67 | தார் சாலை | பந்தடி 5வது மற்றும் 6வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 258.00 | 4.50 | 10.00 |
| 35 | 68 | பேவர் பிளாக் சாலை | அழகர்சாமி நாயுடு மெயின் குறுக்குத் தெரு, செலுக்க சுப்பையா தெரு, வண்ணம்மாள் கோவில் வடக்கு தெற்கு தெரு மற்றும் ராமசாமி நாயுடு 1வது முதல் 4வது தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 670.00 | 3.00 | 24.20 |
| 36 | 71 & 72 | தார் சாலை | புது ராம்நாட் ரோடு (முனிச்சாலை சந்திப்பு முதல் கேட் லாக் ரோடு சந்திப்பு வரை) பகுதியில் தார் சாலை அமைத்தல் | 810.00 | 6.50 | 27.00 |

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 37 | 73 | பேவர் பிளாக் சாலை | காண்பாளையம் 1வது மற்றும் 2வது மெயின் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 520.00 | 5.00 | 25.00 |
| 38 | 74 | பேவர் பிளாக் சாலை | மைனா தெப்பக்குளம் 1வது முதல் 3வது தெரு, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, 1வது முதல் 4வது குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 703.00 | 3.70 | 25.50 |
| 39 | 75 | தார் சாலை | மாடக்குளம் நடுத் தெருவில் தார் சாலை அமைத்தல் மற்றும் மாடக்குளம் குறுக்குத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 402.00 | 6.00 | 15.00 |
| 40 | 76 | தார் சாலை | மாடக்குளம் மெயின் சாலை மற்றும் திருவள்ளுவர் மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 695.00 | 13.00 | 52.50 |
| 41 | 77 | தார் சாலை | வசந்த நகர் 3வது தெரு வடக்கு பக்கம் மற்றும் சத்தியமூர்த்தி தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 490.00 | 5.50 | 23.50 |
| 42 | 80 | தார் சாலை | மேல மாரட் தெருவில் தார் சாலை அமைத்தல் | 225.00 | 7.00 | 15.00 |
| 43 | 87 | பேவர் பிளாக் சாலை | பாலம் மேற்கு சர்வீஸ் சாலை, எம்.கே.புரம் 1வது மற்றும் 2வது தெரு, நல்லமுத்துப் பிள்ளை தெரு மற்றும் காலனி தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 450.00 | 5.00 | 23.40 |

| வ. எண். | வார்டு எண். | தலைப்பு | சாலையின் பெயர் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* |
| 44 | 89 | பேவர் பிளாக் சாலை | வடிவேல் தெரு மற்றும் விவேகானந்தா தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 380.00 | 6.00 | 22.40 |
| 45 | 90 | தார் சாலை | எம்.ஜி.ஆர் கிழக்கு தெரு, மேற்கு தெரு, மேற்கு 1வது, 2வது, 3வது குறுகுத் தெருக்கள், பட்டுக்கோட்டை அழகரி கிழக்கு மற்றும் மேற்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 495.00 | 5.00 | 21.60 |
| 46 | 92 | தார் சாலை | நான்மணி நகர் மற்றும் குறுக்குத் தெரு, அன்னை நகர் 1வது, 2வது தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 515.00 | 4.50 | 28.00 |
| 47 | 93 | தார் சாலை | அழகுசுந்தரம் நகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் தார் சாலை அமைத்தல் | 672.00 | 6.00 | 34.25 |
| 48 | 100 | தார் சாலை | சால்வேசன் ஆர்மி பள்ளி சாலை, பழைய முருகன் தியேட்டர் மெயின் தெருக்களில் தார் சாலை அமைத்தல் மற்றும் இ.பி. காலனி குறுக்குத் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 548.00 | 5.50 | 22.50 |
| | | | **மொத்தம்** | **18335.00** | | **887.50** |

மேற்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு (ந.க.எண். 14094/2014/E 3, நாள். 19.12.2014) மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 800.00 இலட்சம் மானியமாக வரப்பெற்றுள்ளது. எனவே மானியத் தொகை ரூ. 800.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ. 87.50 இலட்சத்தினை மாநகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ளவும் பணிகளை உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:817**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ம. பொ. 5/ 000811/2015**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்புகளில் அடிக்கடி அடைப்பு ஏற்படும் பகுதிகளில் அடைப்பினை சரி செய்ய 4 எண்ணம் பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் இயந்திர வாகனங்கள் (Jet Rodding Machine Vehicle) வாங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மாநகராட்சியானது 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள நான்கு வாகனங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் இவ்வாகனம் அளவில் பெரிதாக உள்ளதாலும் பிரதான சாலைகளில் மட்டுமே உபயோகப்படுத்தப்படுத்தும் நிலை ஏற்பட்டு வருகின்றது. எனவே குறுகிய தெருக்களில் ஏற்படும் பாதாள சாக்கடை அடைப்பினை உடனுக்கடன் சரி செய்வதனை கருத்தில் கொண்டு சிறிய இரண்டு எண்ணம் பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் இயந்திர வாகனங்கள் (Jet Rodding Machine Vehicle) வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் சந்தை விலை விகிதத்தின் அடிப்படையில் கொட்டேசன் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வாகனம் ஒன்றுக்கு உத்தேச மதிப்பீடு ரூ. 13.00 இலட்சம் வீதம் இரண்டு வாகனங்களுக்கு மொத்தம் ரூ. 26.00 இலட்சமாகும். எனவே மேற்கண்ட வாகனத்தின் அத்தியவசியத்தினைக் கருத்தில் கொண்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகையில் வாங்குவதற்கு ஒப்புதல் வேண்டியும் உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:818**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) ம.பொ4/Est.560/13-14**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 43ல் அமைந்துள்ள மாநகராட்சி அண்ணாமாளிகை பிரதான அலுவலக கட்டிடத்திற்கு மின்பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு மின்வசதி கிடைக்கக்கூடிய வகையில் சோலார் பவர்பிளானட் சிஸ்டம் அமைத்து மின்வசதி செய்வதற்கு ரூ.55.83 லட்சத்திற்கு மதீப்பீடு செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண் 469 நாள்:4.9.13ன்படி நிர்வாக ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில் M/s ஆல்டர் எனர்ஜி சிஸ்டம் என்ற நிறுவனம் மதீப்பீட்டு விலைக்கு 0.49% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று வணக்கத்திற்குரிய மேயரின் முன்ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே மேற்கண்ட முன்ஒப்புதல் பெறப்பட்ட வேலை உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:819**
**பின்னேற்புசெய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ4/32194/14**

மதுரை மாநகராட்சிஉள்வட்டச்சுற்றுச்சாலை 0/0 to 0/100 மற்றும் டோல்கேட் எண் 1 ஆகியவற்றின் மையப்பகுதியில் கம்பிவேலி அமைத்து புல்வெளி மற்றும் பூச்செடிகளுடன் சொந்த செலவில் தோட்டம் உருவாக்கி பராமரிப்பு செய்து ஹோட்டல் விளம்பரம் மட்டும் செய்துகொள்ள “Poppys Hotel” நிறுவனம் அனுமதி கோரியுள்ளதை பரீசிலித்து அன்னார்களுக்கு மேற்கண்ட பணியை”Poppys Hotel” விளம்பரங்களை மட்டுமே வைத்து சாலை திட்டு செடிகளை பராமரித்துகொள்ளவும்,சிலைகள் மற்றும் மதசார்புடைய போர்டுகள் ஏதும் வைக்கக்கூடாது என்கிற நிபந்தனைகளுடன் “Poppys Hotel” நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:820**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10)JnS2 / 21387 / 14-UGSS – Pack-III - Block-6**

பழைய மதுரை மாநகராட்சி பகுதியில், உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஐந்து திட்டங்கள் ஒப்புதல் செய்யப்பட்டது. இதில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்களில் மழைநீர் வடிகால் கட்டுமான பணிகள்

முடியும் தருவாயில் உள்ளது. பழைய மதுரை மாநகராட்சிப் பகுதியில் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல், பழைய பாதாள சாக்கடையை மாற்றியமைத்து புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் ஆகிய பணிகள் முடிவுறாத நிலையிலும் உள்ளது.

பழைய மதுரை மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் மூன்று Package-களாக பிரித்து ஒப்புதல் செய்யப்பட்டு, அதில் Package I & II-ன் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. Package-IIIல், விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாகக்டை அமைப்பு உள்ள பகுதியில் புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு M/s. தீபிகா இன்பிராடெக் (பி) லிட், ஹைதராபாத் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு 05.02.2009 அன்று வழங்கப்பட்டு பணியினை தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் பணியினை முடிப்பதற்கான ஒப்பந்த காலம் 24 மாதங்களாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்நிறுவனம், மேற்கண்ட காலத்தில் பணியினை முறையாக மேற்கொள்ளாமல் பணியின் முன்னேற்றத்தில் மிகவும் தொய்வான நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பணியினை விரைவாக முடிக்க ஷோகாஸ் நோட்டீஸ் மற்றும் அபராதமும் விதிக்கப்பட்டது. இதனை அந்நிறுவனம், ஏற்காமல் Adjudicator-யிடம் முறையீடு செய்தது. Adjudicator-ரும் இருதரப்பின் ஆவணங்களை பரிசீலனை செய்து கால நீட்டிப்பு மட்டும் 31.05.2011 வரை வழங்கியது. ஆனால் அந்நிறுவனம் அதனை ஏற்காமல், Arbitration Tribunal-லில் மேல்முறையீடு செய்தது. Arbitration Tribunal இருதரப்பின் ஆவணங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் கால நீட்டிப்பும் மற்றும் பணிகளை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாக சில உத்தரவுகளையும் பிறப்பித்தது. அந்நிறுவனம் கால நீட்டிப்பிற்குள் பணிகளை மிகவும் தொய்வாக செய்ததனால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 11.07.2014 அன்று மாமன்ற ஒப்புதல் பெற்று ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் விட்டுச் சென்ற பணிகளை விரைவில் முடிப்பதற்கு தனித்தனியே மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பினை புனரமைத்தல் போன்ற பணிகளை ஒன்பது சிப்பங்களாக பிரித்து மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிகளில் ஏழு சிப்பங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இரண்டு சிப்பங்களான Block 2 & 6-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. மேற்கண்ட இரண்டு சிப்பங்களுக்கு இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி 06.11.2014 அன்று கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

இவற்றில் சிப்பம் 6–ன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.16கோடியாகும். மேற்கண்ட இரண்டு சிப்பங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் 24.11.2014 அன்று தொழில்நுட்ப ஆய்வுக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது.

சிப்பம் 6–க்கு கீழ்கண்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) M/s. VDB – MKI (JV), Bangalore.
2) M/s. Sachin Construction, Madurai
3) M/s. Sri Devi & Co, Madurai.
4) M/s P. Raju, Madurai.

மேற்கண்ட நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப குழுவால் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருந்த காரணத்தினால் இந்நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை திறக்க தொழில்நுட்ப ஆய்வுக் குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது.

1) M/s. VDB – MKI (JV), Bangalore – L2
2) M/s. Sri Devi & Co, Madurai – L1

மேற்கண்ட நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பீடு செய்த போது M/s. Sri Devi & Co, Madurai- L1 நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியாக ரூ.33029383/- குறித்திருந்தது இது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகையான ரூ.301161072/-ஐ விட 9.51% கூடுதலாக இருந்தது. மேற்கண்ட நிறுவனத்தினிடம் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் மேற்கண்ட நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் மேற்கண்ட நிறுவனம் குறைத்து கொடுக்கப்பட்ட தொகையானது, ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகையை விட 7.9% கூடுதலாக இருந்தது. இத்தொகையினை 2014-15–ஆம் ஆண்டு விலைவிகிதத்தோடு ஒப்பீடு செய்ததில 4.88% கூடுதலாக உள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கிய திட்டங்கள் அனைத்தும் மார்ச் 2015–க்குள் முடிக்க வேண்டுமென உத்திரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், பணியினை விரைந்து முடிக்க வேண்டிய நிலையில் M/s. Sri Devi & Co, Madurai – நிறுவனத்தாரால் குறைத்து கொடுக்கப்பட்ட தொகையான ரூ.32543797/-யை ஏற்று, மேற்கண்ட M/s. Sri Devi & Co, Madurai நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:821**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) JnS2 / 21387 / 14-UGSS – Pack-III - Block-2**

பழைய மதுரை மாநகராட்சி பகுதியில், உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஐந்து திட்டங்கள் ஒப்புதல் செய்யப்பட்டது. இதில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு திட்டங்களில் மழைநீர் வடிகால் கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. பழைய மதுரை மாநகராட்சிப் பகுதியில் விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல், பழைய பாதாள சாக்கடையை மாற்றியமைத்து புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் ஆகிய பணிகள் முடிவுறாத நிலையிலும் உள்ளது.

பழைய மதுரை மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் மூன்று Package-களாக பிரித்து ஒப்புதல் செய்யப்பட்டு, அதில் Package I & II-ன் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. Package-IIIல், விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாகக்டை அமைப்பு உள்ள பகுதியில் புதிய பாதாள சாக்கடை அமைப்பு உருவாக்குதல் போன்ற பணிகளை செய்வதற்கு M/s. தீபிகா இன்பிராடெக் (பி) லிட், ஹைதராபாத் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு 05.02.2009 அன்று வழங்கப்பட்டு பணியினை தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் பணியினை முடிப்பதற்கான ஒப்பந்த காலம் 24 மாதங்களாக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இந்நிறுவனம், மேற்கண்ட காலத்தில் பணியினை முறையாக மேற்கொள்ளாமல் பணியின் முன்னேற்றத்தில் மிகவும் தொய்வான நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பணியினை விரைவாக முடிக்க ஷோகாஸ் நோட்டீஸ் மற்றும் அபராதமும் விதிக்கப்பட்டது. இதனை அந்நிறுவனம், ஏற்காமல் Adjudicator-யிடம் முறையீடு செய்தது. Adjudicator-ரும் இருதரப்பின் ஆவணங்களை பரிசீலனை செய்து கால நீட்டிப்பு மட்டும் 31.05.2011 வரை வழங்கியது. ஆனால் அந்நிறுவனம் அதனை ஏற்காமல், Arbitration Tribunal-லில் மேல்முறையீடு செய்தது. Arbitration Tribunal இருதரப்பின் ஆவணங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் கால நீட்டிப்பும் மற்றும் பணிகளை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாக சில உத்தரவுகளையும் பிறப்பித்தது. அந்நிறுவனம் கால நீட்டிப்பிற்குள் பணிகளை மிகவும் தொய்வாக செய்ததனால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 11.07.2014 அன்று மாமன்ற ஒப்புதல் பெற்று ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் விட்டுச் சென்ற பணிகளை விரைவில் முடிப்பதற்கு தனித்தனியே மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பழைய பாதாள சாக்கடை அமைப்பு உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை அமைப்பினை புனரமைத்தல் போன்ற பணிகளை ஒன்பது சிப்பங்களாக பிரித்து மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இப்பணிகளில் ஏழு சிப்பங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இரண்டு சிப்பங்களான Block 2 & 6-க்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. மேற்கண்ட இரண்டு சிப்பங்களுக்கு இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி 06.11.2014 அன்று கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

இவற்றில் சிப்பம் 2–ன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 6.73 கோடியாகும். மேற்கண்ட இரண்டு சிப்பங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் 24.11.2014 அன்று தொழில்நுட்ப ஆய்வுக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டது.

சிப்பம் 2–க்கு கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) M/s. VDB – MKI (JV), Bangalore.

2) M/s. Sachin Construction, Madurai.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப குழுவால் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனத்தின் தொழில்நுட்ப தகுதிகள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருந்த காரணத்தினால் இந்நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்க தொழில்நுட்ப ஆய்வுக் குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டது.

1) M/s. VDB – MKI (JV), Bangalore

மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி **03.12.2014** அன்று திறக்கப்பட்டு ஒப்பீடு செய்த போது M/s. VDB – MKI (JV), Bangalore நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியாக ரூ.81247964/- குறித்திருந்தது. இது ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகையான ரூ.64473083/-ஐ விட 26% கூடுதலாக இருந்தது. மேற்கண்ட நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் மேற்கண்ட நிறுவனம் குறைத்து கொடுக்கப்பட்ட தொகையானது, ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகையை விட 8.24% கூடுதலாக இருந்தது. இத்தொகையினை 2014-15–ஆம் ஆண்டு விலைவிகிதத்தோடு ஒப்பீடு செய்ததில் 4.9% கூடுதலாக உள்ளது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கிய திட்டங்கள் அனைத்தும் மார்ச் 2015–க்குள் முடிக்க வேண்டுமென உத்திரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், பணியினை விரைந்து முடிக்க வேண்டிய நிலையில் M/s. VDB – MKI (JV), Bangalore – நிறுவனத்தார் விலை விகிதம் குறைத்து கொடுக்கப்பட்ட தொகையான ரூ.69785665/-யை ஏற்று, மேற்கண்ட M/s. VDB – MKI (JV), Bangalore நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:822**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 12) JnS2 / E 21387 / 2014 – UGSS- Pack – III ( A )

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கும், பழைய பாதாள சாக்கடையை புதுப்பிக்கவும், முந்திரிதோப்பு மற்றும் சந்தைப்பேட்டை பிரதான கழிவு நீரேற்று நிலையங்களில் இருந்து கழிவுநீரை விசையுந்து செய்து முறையே சக்கிமங்கலம் மற்றும் அவனியாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லும் PSC உந்துகுழாய் பதிக்கும்பணிகள் ஆகியவை சிப்பம்–III(ல்) அடங்கும்.

மேற்படி பாதாள சாக்கடை திட்டம் சிப்பம் – III-க்கான ஒப்பந்ததாரர் ஹைதராபாத்தை சேர்ந்த M/s தீபிகா நிறுவனத்தினர் பணிகளை மிகவும் தொய்வாக செய்து வந்ததால் **11.07.2014** அன்று ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதற்கும், ஒப்பந்ததாரர் பணிகளை முழுமையாக முடிக்காமல் விட்டு சென்ற விடுப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள், கழிவுநீர் விசை உந்து குழாய் பதிக்கும் பணிகளில் விடுப்பட்ட பணிகள், மற்றும் ஏற்கனவே பாதாள சாக்கடை அமைக்கபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளில் விடுப்பட்ட பணிகள் ஆகியவற்றிற்கு தனிதனியே மதிப்பீடு செய்ய மாமன்றம் தீர்மான எண்: 672 நாள்: 31.07.14-யில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முந்திரித்தோப்பு பிரதான கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து 1100 mm விட்டமுள்ள PSC உந்து குழாய் சக்கிமங்கலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குழாய் பதிக்கும் பணிகளை முழுமையாக முடிக்காமல் ஆங்காங்கு இடைவெளி விடப்பட்ட பகுதிகளுக்கு ரூ.**75**இலட்சத்தற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 15.10.2014 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. **11.11.2014** அன்று இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்த நாளான்று திரு.E.தனராஜன் மற்றும் MKP Construction ஆகிய இருவரிடமிருந்து e-Tender மூலம் ஒப்பந்த புள்ளி பெறப்பட்டது. மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகளின் விலைப்பட்டியல் மதிப்பீட்டு விலையுடன் ஒப்பிடு செய்ததில் திரு. E.தனராஜன், மதுரை **15**சதவீதம் கூடுதலாகவும் MKP Construction 19.44 சதவீதம் கூடுதலாகவும் விலைப்புள்ளி கொடுத்திருந்தனர். இதில் விலைப்புள்ளி குறைவாக கொடுத்த L1 ஒப்பந்ததாரர் திரு. E.தனராஜன், மதுரை அவர்களிடமிருந்து விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் அந்நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகை ரூ.7186979/-ஐ விட கூடுதலாக 8.1% செய்து தருவதாகவும் கட்டுமான பொருட்கள், PSC குழாய் விலையேற்றத்தால் அதற்கு மேல் விலைகுறைப்பு செய்ய இயலாது எனவும் கடிதம் கொடுத்துள்ளார். விலைக் குறைப்பு செய்யப்பட்ட விலை விகிதம் 2014-15-ம் ஆண்டு விலை விகிதத்தோடு ஒப்பீடு

செய்யும் போது திரு. E.தனராஜன்–ஆல் விலை குறைத்து கொடுத்த தொகையானது 2014-15-ம் ஆண்டு விலை விகிதத்திற்கு 0.06% குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு திரு. E.தனராஜன், மதுரை அவர்கள் குறைத்து கொடுத்துள்ள தொகையான ரூ.7769124/-ஐ ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் சதவிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை மதுரை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மேலும் மாமன்ற தீர்மான எண்: 671 நாள்: 31.07.2014–யின் படி கூடுதல் செலவினத்தை M/s தீபிகா நிறுவனத்திடமிருந்து பெற்று ஈடு செய்து கொள்ளவும் மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:823**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

13)**மதி 1/15030/12**

மதுரை மாநகராட்சி, வார்டு 42, சொக்கிகுளம், வல்லபாய் சாலையில் அமைந்துள்ள வடமலையான் மருத்துவமனையின் தலைவர் மற்றும் மேலாண்மை நிர்வாக இயக்குனர் அவர்கள் வல்லபாய் சாலையின் இருபுறமும் அமைந்துள்ள தனது மருத்துவமனையை இணைக்கும் வகையில் நடைபாதை மேம்பாலம் கட்ட அனுமதி வேண்டி 23.05.2012 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். இம் மருத்துவமனை சர்வே எண் X பிளாக் எண் 105,புல எண் 2787/1B மற்றும் 2802/1Aல் அமைகிறது. நடைபாதை மேம்பாலம் கட்ட அனுமதி கோரும் இடம் (வல்லபாய் சாலை) சர்வே எண் X பிளாக் எண் 105,புல எண் 2788ல் அமைகிறது. மனுதாரர் வல்லபாய் சாலைக்கு மேற்கு மற்றும் கிழக்கு பக்கம் அமைந்துள்ள மருத்துவமனையின் இரண்டாம் தளத்தை இணைக்கும் வகையில் நடைபாதை மேம்பாலம் (Foot Over Bridge)கட்ட விண்ணப்பித்துள்ளார். நடைமேம்பாலம் அகலம் 3 மீட்டர் சாலையின் மைய பகுதியில் இருந்து நடை மேம்பாலம் 9.05 மீட்டர் உயரத்தில் அமைக்கவும், நடை மேம்பாலத்தின் நீளம் 26.38 மீ என வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தனது விண்ணபத்தில் இம்மருத்துவமனை 260 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை எனவும் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மருத்துவமனை இயங்கி வருவதாக தெரிவித்துள்ளார். சாலையின் இருபுறமும் அமைந்துள்ள வளாகத்தில் இருந்து பொதுமக்கள் மற்றும் உள்நோயாளிகள் சாலையை கடக்காமல் நடை மேம்பாலத்தில் வழியாக சென்றால் பொது மக்கள் மற்றும் உள்நோயாளிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

நகரப் பொறியாளர் தனது 23.05.2012ம் தேதிய கடிதத்தல் கீழ்கண்ட நிபந்தனைகளின்படி அனுமதிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

1) மேம்பாலத்தின் (Foot Over Bridge) உயரம் 6 மீட்டர் இருக்க வேண்டும்.
2) தூண்கள் (Pillars) அமைப்பது பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் மனுதாரடைய சொந்த இடத்தில் அமைக்க வேண்டும்.
3) பின்வரும் காலங்களில் சாலை அபிவிருத்தி திட்டங்கள் ஏதேனும் புதியதாக செயல்படுத்துவதாக இருந்தால் மேற்கண்ட பாலம் அகற்ற நேரிடலாம். எனவே, மேற்கண்ட பாலத்தை அப்போது அகற்றி கொடுக்க வேண்டும்.
4) பாலம் வடிவமைப்பு மாநகராட்சியில் ஒப்புதல் பெற்ற பின் வேலை ஆரம்பிக்க வேண்டும்.
5) பாலத்தின் கீழ் பகுதியில் போதிய வெளிச்சம் இருக்கும் வண்ணம் விளக்குகள் அமைக்க வேண்டும்.
6) நடைபாதை மேம்பாலம் பொதுமக்கள் நடக்கும் போது எவ்வித இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும்.
7) ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் மனுதாரர் பொறுப்பேற்க வேண்டும். மேலும், மாநகர் காவல் ஆணையாளர் அவர்கள் ந.க.எண்.2/28336/1015/2012,நாள் 30.05.2012ம் தேதிய கடிதத்தில் 10 அடி அகலமும், 30 அடி உயரமும் கொண்ட இரும்பு நடை மேம்பாலம் கட்டுவதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் படி தடையின்மை சான்று வழங்கப்பட்டது.

**நிபந்தனைகள்**

- பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்வித இடையூறும் இருத்தல் கூடாது.

- மின்சார வாரியத்திடம் முறையான அனுமதி பெற வேண்டும்.
- மதுரை மாநகராட்சியில் மேற்படி பாலம் கட்டுமான வரைபடம் மற்றும் அனுமதி பெற்ற பின்னர் தான் கட்டிட பணியினை தொடங்கப்பட வேண்டும்.
- நடைபாதை மற்றும் மற்றவர்களின் உரிமைக்குட்பட்ட பகுதியில் ஆக்கிரமிப்பு இல்லாமல் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
- மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு பாலத்தின் உயரம் தரையிலிருந்து 30'0' குறையமல் இருக்க வேண்டும்.
- கட்டப்படும் மேம்பாலத்தில் எவ்வித விளம்பரமும் செய்யக்கூடாது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் மின் பகிர்மானம் வடக்கு மெட்ரோ அவர்களின் கடித எண் EE/D/N/MEDC /METRO/MDU/TA/FHTS/C/D.No.1209/2012,நாள் 30.05.2012ல் தேதிய கடிதத்தில் இரண்டாம் தளம் தள மட்டத்தில் நடை மேம்பாலம் கட்ட ஆட்சேபனை இல்லை என தெரிவித்துள்ளார். மேலும், உத்தேச நடை மேம்பாலம் அமைந்தால் 440 வோல்ட் குறைந்த அழுத்த மின்சார பயனுக்கு போதுமான மின்சார கிளியரன்ஸ் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரரின் கோரிக்கையின் பேரில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மாமன்ற தீர்மானம் எண் 196,நாள் 30.05.2012ன் படி மனுதாரரின் கோரிக்கையினை அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்க ஒப்புதல் அளித்து தீர்மான நிறைவேற்றப்பட்டது. மேற்கூறிய துறைகளின் தடையில்லா சான்றுகளுடன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு 11.06.2012ல் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 14079/12/PA1 நாள் 10,08,2012ம் தேதிய கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளார்,

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண் 39780/2012/மாந.அ. நாள் 26,09,2012ம் தேதிய கூடுதல் விபரங்கள் மதுரை மாநகராட்சி ஆணையர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது,

உரிய கூடுதல் விபரங்களுடன் மாநகராட்சி ஆணையர் 20,08,2013ம் தேதிய ஒப்புதலின் படி வேண்டி உரிய உத்தரவு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது,

நகராட்சி நிர்வாக ஆணையர் தனது கடித எண்: L.DIS 39780/2012/MCA3 நாள் 5,6,2013ன் படி மாநகராட்சி ஆணையாளரே நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு முடிவு எடுக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது,

நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்தின் படி மனுதாரர் நடை மேம்பாலம் கட்ட உத்தரவு வழங்கும் படி நாளில் விண்ணப்பம் செய்துள்ளார்,

மனுதாரின் மருத்துவமனை வல்லபாய் ரோட்டில் சுமார் 40 வருடங்களுக்கு மேல் செயல்பட்டு வருகிறது. வல்லபாய் ரோட்டின் மேற்கு பக்கம் மற்றும் கிழக்கு பக்கம் மருத்துவமனை இயங்கி வருகிறது, பொது மக்கள் மற்றம் உள்நோயாளிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் பிற பயன்பாட்டிற்கு மேற்கு பக்கம் வளாகத்தில் இருந்து கிழக்கு பக்க வளாகத்திற்கும், கிழக்கு பக்க வளாகத்தில் இருந்து மேற்கு பக்க வளாகத்திற்கு செல்லும் போது வாகன போக்குவரத்தினால் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது,

பொது மக்கள் மற்றம் உள்நோயாளிகள், புற நோயாளிகள் ஆகியோரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் மாநகராட்சி நகர பொறியாளர் 23,05,2012ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படியும், மாநகர காவல் ஆணையாளரின் 30,05,2012ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி வழங்கப்பட்டுள்ள தடையின்மை சான்றின் படியும், தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் பகிர்மானம் மதுரை வடக்கு மெட்ரோ அவர்களின் ஆட்சேபணை இல்லா சான்று ஆகியவற்றின் அடிப்படையில் பொதுமக்கள், உள்மற்றும் புற நோயாளிகளுக்கு ஏற்படவுள்ள ஆபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு கீழ் கண்ட நிபந்தனைகளுடன் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் நடை மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்கலாம்,

**<u>நிபந்தனைகள்</u>**

1) மேம்பாலத்தின் உயரம் சாலையின் மையத்தில் இருந்து 9 மீட்டர் உயரத்தில் அமைக்க வேண்டும்,
2) அமைக்கப்படும் தூண்கள் (PILLARS) மருத்துவமனை வளாகத்திற்குள் தங்களது சொந்த இடத்திற்குள் அமைக்க வேண்டும்.
3) பின்வரும் காலங்ளில் மாநகராட்சியோ அல்லது பிற அரசு துறைகளோ அல்லது அரசு சார்ந்த துறைகள் மூலமாக அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்வதாக இருந்தால் தங்களது சொந்த செலவில் பாலத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டும்,
4) பாலத்தின் கீழ் பகுதியல் பொது மக்களாகிய பாதாசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் பயன் பெறும் வகையில் போதிய மின் விளக்குகள் தங்களது சொந்த செலவில் அமைத்து பராமரிக்க வேண்டும்.
5) நடைமேம்பாலத்தை பொதுமக்கள், உள் மற்றும் புற நோயாளிகள் பயன்படுத்தும் போது இயற்கை இடர்பாடுகளால் ஏதும் அசம்பாவிதம் ஏற்படும் பட்சத்தில் இழப்பீடுகளுக்கு தாங்களே முழு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும
6) கட்டப்படும் நடை மேம்பாலத்தில் எவ்வித விளம்பரமும் செய்யக்கூடாது.

7) மாநகராட்சி வருவாயை பெருக்கும் நோக்கில் மாநகராட்சிக்குச் சொந்தமான தங்களது நடை மேம்பாலம் சாலையின் மேல் அமைவதால் மாத வாடகை ரூ.6000/- வீதம் 12 மாதத்திற்கு ரூ.72000/- நிர்ணயம் செய்யலாம். மேலும், இத்தொகையை ஒவ்வொரு நிதி ஆண்டின் தொடக்கத்தில் ஏப்ரல் 1ந் தேதி முதல் 15ந் தேதிக்குள் செலுத்த வேண்டும். மேலும், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 5% கூடுதல் கட்டணம் செலுத்திட வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளுடன் நடைமேம்பாலம் கட்ட அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:824**

**பொருளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14)** மதி1/16122/14

மதுரை மாநகராட்சி,TS No.8,சர்வே வார்டு V,பிளாக் 53,மண்டலம் 1, மாநகராட்சி வார்டு 17ல் 75 குடும்பங்கள் 10'x10' என்ற அளவிலான கல்நார் தகடுளால் (AC Sheet)ஆன வீடுகளால் குடியிருந்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (RAY SCHEME) அடுக்குமாடி குடியிருப்புகள் (G+3) கட்டி தருவதற்கு 0.381ஏக்கர் நிலத்தினை குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்குமாறு நிர்வாக பொறியாளர்,தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் அவர்களின் கடித எண் Lr.No./80/AE(P)/2014,நாள் 27.05.2014ல் கோரப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் தென் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான சத்துணவுக் கூடம், சமுதாயக் கூடம் ஆகிய கட்டிடங்கள் உள்ளதால் மேற்படி இடத்தின் தென் பகுதியை மாநகராட்சியின் உபயோகத்திற்காக தேவைப்படுவதால் வடபகுதியில் அடுக்குமாடி வீடுகள் கட்ட அனுமதி அளிக்கும்பட்சத்தில் மேற்கண்ட வடபகுதியில் கட்ட உத்தேசித்துள்ள கட்டிட பரப்பு மற்றும் மனையின் நீளம் மற்றும் அகலம் ஆகியவைகள் தெளிவாக குறிப்பிட்டு வரைபடம் சமர்ப்பிக்குமாறு செயற்பொறியாளர்(திட்டம்) அவர்கள் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்படி சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ள மேற்கண்ட திட்டப் பகுதியின் 0.381 ஏக்கர் அளவிலான நிலத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைப்பதற்கு மற்றும் மேற்படி நிலத்திற்கான முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:825**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15)நக.எண்.மதி 2/028837/14**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் எண் : 2, வார்டு எண் : 33, அண்ணா நகர், New L.I.G.Colony, புல எண் : 10, மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் சுமார் 25,887.5 சதுர அடி உள்ளது. அவ்விடத்தில் அண்ணா நகர் துணை மின் நிலையம் அமைக்க நிலம் தேவைப்படுவதாகவும் அதற்கான கிரையத் தொகை விபரம் கோரி செயற்பொறியாளர் வடக்கு, பெருநகர் மின் பகிர்மானம், மதுரை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

அண்ணா நகர், New L.I.G.Colony-ல் வழிகாட்டி மதிப்பு சதுர அடி 1-க்கு ரூ.3000/- என தல்லாகுளம் சார்பதிவாளர் தனது கடித எண் : 226/2014, நாள் : 27.10.2014-ல் தெரிவித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண் : 35, நாள் : 17.02.1997-ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை) கிரையம் செய்வது சம்பந்தமாக கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private Land belonging to Municipal Councils and Municipal Corporation Councils) அது எந்த அரசு மற்றும் அரசு துறை சார்ந்த நிறுவனத்துக்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும்".

ஏனவே சார் பதிவாளர் வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் சதுர அடி 1-க்கு ரூ.3000/- என தெரிவித்ததன் அடிப்படையில் தற்போதைய சந்தை மதிப்பிற்காக மேற்கண்ட

வழிகாட்டின் மதிப்பிலிருந்து 200% உயர்த்தி கிரைய தொகையினை நிர்ணயம் செய்து வசூல் செய்த பின்னர் மின் வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வரிசை. எண் : | தெருவின் பெயர் | சார் பதிவாளர் அவர்களின் வழிகாட்டி மதிப்பு (சதுர அடி 1-க்கு ) | 200% உயர்த்திய சந்தை மதிப்பு (சதுர அடி 1-க்கு) | மொத்த சதுர அடி | தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | அண்ணா நகர், New L.I.G.Colony, | ரூ.3000/- | 3000<br>100 = 30x 200<br>= 6000 | 25,887.50 | 15,52,65,000.00 | |

**தீர்மான எண்:826**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16)மதி 4/32982/2014**

மதுரை தெற்கு வட்டம் அவனியாபுரம் கிராமம் புறம்புகல் புல எண்.669 மற்றும் 2 புல எண்களில் கட்டுப்பட்ட 3.02.5 ஹெக்டேர் நிலத்தை தியாகராசர் பொறியியல் கல்லூரி டிரஸ்ட் பெயரில் பரிவர்த்தனை செய்வதற்கு மாநகராட்சி இசைவு வழங்கக்கோரி மதுரை தெற்கு வட்டாட்சியர் கடிதம் ந.க.எண்.6796/2014/8, நாள் 29.09.2014 வரப்பெற்றுள்ளது.

தியாகராசர் பொறியியல் கல்லூரி கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட புறம்புகல் நிலங்களை கடந்த சுமார் 50 வருடங்களாக கல்வி பயன்பாட்டிற்கு அனுபவம் செய்து வருகின்றனர்.

**புறம்புகல் நிலங்கள் விபரம்**

| கிராமம் | புல எண் | பாகுபாடு | பரப்பு | அனுமதி கோரும் பரப்பு |
|---|---|---|---|---|
| அவனியாபுரம் | 664/2பி | ரோடு | 0.05.0 | 0.05.0 |
| | 665 | வண்டிப்பாதை | 0.22.5 | 0.22.5 |
| | 666/2பி | ரோடு | 0.02.5 | 0.02.5 |
| | 666/2டி | ரோடு | 0.01.5 | 0.01.5 |
| | 666/3பி | வாய்க்கால் | 0.12.0 | 0.12.0 |
| | 666/3டி | வாய்க்கால் | 0.03.0 | 0.03.0 |
| | 666/4ஏ3 | ரோடு | 0.02.5 | 0.02.5 |
| | 666/4பி2 | ரோடு | 0.01.0 | 0.01.0 |
| | 666/4பி4 | ரோடு | 0.01.5 | 0.01.5 |
| | 667/1 | வண்டிப்பாதை | 0.01.0 | 0.01.0 |
| | 667/3 | வண்டிப்பாதை | 1.15.0 | 1.15.0 |
| | 667/5 | வண்டிப்பாதை | 0.04.0 | 0.04.0 |
| | 668/2 | ரோடு | 0.04.5 | 0.04.5 |
| | 669/2 | களம் | 0.67.5 | 0.36.5 |
| | 671/1 | வண்டிப்பாதை களம் | 0.19.5 | 0.19.5 |
| | 671/3 | வண்டிப்பாதை களம் | 0.16.0 | 0.16.0 |
| | 672/3ஏ | ரோடு | 0.07.0 | 0.07.0 |
| | 673/1 | வண்டிப்பாதை | 0.67.0 | 0.25.5 |
| | 674/2பி2 | ரோடு | 0.03.5 | 0.03.5 |
| | 675/1பி | ரோடு | 0.02.0 | 0.02.0 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 675/2பி | ரோடு | 0.02.0 | 0.02.0 |
| | 675/6பி | ரோடு | 0.07.0 | 0.07.0 |
| | 676/5பி | ரோடு | 0.05.0 | 0.05.0 |
| | 676/7ஏ | ரோடு | 0.00.5 | 0.00.5 |
| | 676/8பி | ரோடு | 0.02.0 | 0.02.0 |
| **மொத்தம்** | | | | **3.02.5** |

மேற்கண்ட நிலங்களுக்கு ஈடாக தியாகராசர் கல்லூரி எண்டோல்மெண்ட் டிரஸ்டிற்கு சொந்தமான திருப்பரங்குன்றம் கிராமம் பட்டா எண் 20-ல் கீழ்க்கண்ட புலஎண்களில் கட்டுப்பட்ட நிலங்களை அரசுக்கு விட்டுக் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

| **சர்வே எண்** | **விஸ்தீரணம் (ஹெக்டேர்)** |
|---|---|
| 219/1A | 0.41.5 |
| 219/2A | 0.69.5 |
| 220/1A | 0.35.0 |
| | **மொத்தம் 1.46.0** |

எனவே, தியாகராசர் பொறியியல் கல்லூரி உபயோகத்தில் உள்ள அரசு புறம்புகல் 3.02.5 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தினை பரிவர்த்தனை அடிப்படையில் தியாகராசர் பொறியியல் கல்லூரி நிர்வாகத்திற்கு வழங்க மேற்படி 219/1A, 219/2A, 220/1A புலஎண்களில் உள்ள 1.46.0 ஹெக்டேர் நிலத்தினை மதுரை மாநகராட்சிக்கு வழங்கிடும் நிலையில் மதுரை மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையில்லையென மதுரை தெற்கு வட்டாட்சியருக்கு தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:827**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17)மு.வ2/013915/14**

மதுரை மாநகராட்சி மண்டலம்-2 மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் உரிமம் எந்த உரிமத்திற்கு வழங்கப்பட்டதோ அதற்கு மாறாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் கடையின் கட்டிட அமைப்புகள் ஒப்படைக்கப்பட்டதற்கு மாறாக மாநகராட்சி அனுமதி பெறாமல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கடைகளுக்கு மாநகராட்சியால் அமைத்து கொடுக்கப்பட்ட கதவுகள் அகற்றப்பட்டுள்ளது.

இது மாநகராட்சி விதிகளுக்கும், ஏல நிபந்தனைகளுக்கும் மாறானதாக இருப்பதால் மாநகராட்சி 100 வார்டுகளில் உள்ள உரிமம் அனுமதிக்கப்பட்டதற்கு மாறான உபயோகத்தில் உள்ள கடைகள் மற்றும் அனுமதி பெறாமல் கடை அமைப்புகள் மாற்றம் செய்துள்ள கடைகள், மாநகராட்சியால் அமைத்து கொடுக்கப்பட்டிருந்த கதவுகளை அகற்றிய கடைகளின் உரிமதாரர்களுக்கு 7 நாள் அவகாசம் அளித்து உரிய காலத்தில் சரி செய்யாதவர்களின் கடை உரிமத்தை ரத்து செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:828**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18)மவ3/ம.பொ.4/034589/14**

மதுரை மாநகராட்சி மண்டலம் –2ல் உள்ள மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையததின் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆம்னி பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்திற்கு ஏற்படும் அன்றாட செலவினங்கள் (மின்கட்டணம், குப்பைகள் அகற்றுவது, கழிப்பிடபராமரிப்பு, குடிநீர்வசதி, பாதாளச்சாக்கடை பராமரிப்பு) அடிப்படையில் ஆம்னி பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு ஒரு பேருந்துக்கு ஒரு நாளைக்கு ரூ.150/- வீதம் நுழைவு கட்டணம் நிர்ணயிக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:829**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**19)ம.வ4/024688/13**

மதுரை மாநகராட்சி பாத்தியப்பட்ட 100 வார்டுகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அசையா சொத்துகளாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள், சாலையோரகடைகள் ஆகியவைகளின் மாத வாடகை சம்பந்தப்பட்ட உரிமம்தாரர்களால் பிரதி மாதம் 5ம் தேதிகுள் செலுத்தப்பட வேண்டும். பெரும்பாலான உரிமம்தாரர்கள் உரிய காலத்தில் வாடகை செலுத்தாததால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதை தவிர்கவும் மாத வாடகை உரிய காலத்தில் செலுத்துவதை நடைமுறைபடுத்தவும் மாத வாடகை பிரதி மாதம் 5ம் தேதி செலுத்தாதவர்களுக்கு 25% அபராதமாகவும் அதன்பிறகும் 30 நாட்களுக்கு மேல் வாடகை செலுத்தாதவர்களுக்கு 50% அபராதமாகவும் விதிக்கவும் மற்றும் மூன்று மாதத்திற்கு மேல் வாடகை செலுத்தாதவர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:830**
**மாத வாடகை பிரதி மாதம் 5ம்தேதிக்குள் செலுத்தாதவர்களுக்கு 10% அபராதமும், 30 நாட்களுக்குமேல் வாடகை செலுத்தாதவர்களுக்கு 25% அபராதமும், 6 மாதத்திற்கு மேல் வாடகை செலுத்தாதவர்களுக்கு உரிமத்தை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20)மநி2/024000/2013**

மதுரை மாநகராட்சியில் அவனியாபுரம் புல்பண்ணை கண்காணிப்பாளராக திரு.V.செந்தில்குமார் என்பவரை வேளாண்மைத்துறையிலிருந்து அயற்பணியில் ஓராண்டுக்கு பணிபுரிய ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தனியர் 16.02.2013 ல் பணியில் சேர்ந்தார். 15.12.2014 ம் தேதியுடன் ஓராண்டு அயற்பணி நிறைவடைந்து விடுகிறது. கழிவுநீர் பண்ணையில் தற்போது உள்ள புல் மற்றும் காய்கறி பயிர் சாகுபடிக்கு மாற்றாக மரம் மற்றும் உணவில்லா பயிர் சாகுபடி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பண்ணைப்பட்டி பழத்தோட்டத்தில் ஆண்டு பராமரிப்பிற்காக ரூ.26 லட்சம் செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த பண்ணையில் சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன கருவிகள் அமைத்து நவீன இயந்திரங்களை கொண்டு பராமரிப்பு செய்வதன் மூலம் ஆண்டு பராமரிப்பு செலவை சுமார் ரூ.6 லட்சமாக குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மதுரை மாநகராட்சிக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.20 லட்சம் சேமிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள பூங்காக்களின் பராமரிப்பிற்காக பயன்படுத்தப்படும் தண்ணீரின் அளவை சிக்கனப்படுத்தும் பொருட்டு சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பூங்கா பராமரிப்பு பணியாளர்களின் எண்ணிக்கை குறைவதால் பராமரிப்பு செலவும் குறைய வாய்ப்புள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தும் தொடங்கப்பட்டு நிறைவடைய இரண்டு காலம் ஆகலாம்.

மேலும் மாநகராட்சி பள்ளிகளில் மாடித்தோட்டம் அமைத்து காய்கறி சாகுபடி செய்யும் செயல் விளக்கத்திடல்கள் இரண்டு பள்ளிகளில் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. இதனை வாய்ப்புள்ள அனைத்து மாநகராட்சி பள்ளிகளிலும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து பணிகளையும் அயற்பணியில் பணியாற்றும் வேளாண்மை அலுவலர் திரு.V.செந்தில்குமார் அவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதால் அன்னார் விருப்பம் தெரிவித்ததின்படி தமிழ்நாடு வேளாண்மைத்துறை சென்னை கடிதம் எண் : வேஅநி2/100684/2014 நாள்: 20.11.2014 ம் தேதிய செயல்முறை ஆணைப்படி அன்னாரை மதுரை மாநகராட்சியில் 16.12.2014 முதல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அயற்பணியில் பணி நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:831**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

21)**மறி 10/034156/2014**

தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.S.செந்தில்குமார் என்பவர் குடும்ப சூழ்நிலையின் காரணமாக மதுரை மாநகராட்சிக்கு பணிமாறுதல் கோரிய விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.73/27.06.2014ல் தனியரின் விண்ணப்பத்தினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க அனுமதிக்கப்பட்டதாக தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கடிதம் எண்.5985/2014/சி2 நாள் : 12.07.2014ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதுரை மாநகராட்சியில் காலியாகவுள்ள வருவாய் உதவியாளர் பணியிடத்தில் திரு.S.செந்தில்குமார் வருவாய் உதவியாளரை ஒரு வழி பணிமாறுதலில் ஈர்த்துக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:832**

**மதுரை மாநகராட்சி வருவாய் உதவியாளர்களில் திரு.S.செந்தில்குமார் என்பவரை இளையவராகவைத்து ஈர்த்துக்கொள்ள குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**22)மறி 12/36673/2001**

மதுரை மாநகராட்சி மைய நிர்வாகப்பிரிவு கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco-Chennai, The Government of Tamilnadu Undertaking) திரு.மாயாண்டி, Texco பணியாளர், தலைமைக் காவலராக ஆணையாளர் அவர்கள் இல்லத்தில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்கண்ட பணியாளருக்கு அரசு ஆணை எண்.1740, நாள் :05.11.2007-ல் Public (Ex-servicemen) Department TEXCO பணியாளர்களுக்கு அகவிலைப்படியின் பேரில் கீழ்கண்டவாறு 01.04.14 முதல் திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியது.

| வ.எண் | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம் (ரூபாய்) | 01.04.2014 முதல் வழங்க வேண்டிய ஊதியம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 11,294 | 12,242 |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவை கட்டணம் 12%, சேவை வரி 12.36% வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:833**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**23)மறி 23/026007/ 2014**

சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையின் கீழ் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த திரு.சாமுவேல், மாற்றுத் தொழிலாளி (கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளி) தன் குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு ஒருவழிப் பணிமாறுதலில் மதுரை மாநகராட்சிக்கு செல்ல சென்னை மாநகராட்சி தீர்மானம் எண்.503/2014 நாள்:31.09.2014–ல் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, மதுரை மாநகராட்சியில் தற்போதைய பணிவிதிகளின்படி மாற்றுத்திறனாளிகளுக்கான பணியிடம் ஏதும் இல்லை மாற்றுத்திறனாளிகளில் 1% கண்பார்வையற்றோருக்கு பணி வழங்க வேண்டும் என்ற விதிமுறை இருப்பினும் பார்வை திறன் குறைந்தவர்களுக்காக கண்டறியப்பட்ட பணியான டெலிபோன் ஆப்பரேட்டர் மற்றும் நாற்காலி பின்னுதல் போன்ற பணியிடங்கள் ஏதும் மதுரை மாநகராட்சியில் காலி இல்லை என்பதால் திரு.சாமுவேல் என்பவருக்கு ஒரு

வழிப்பணிமாறுதல் வழங்க இயலாது என்று தெரிவிக்க ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:834**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**24)மந2/9156/2007**

மதுரை மாநகராட்சி மைய பொது சுகாதாரப்பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர்கள் காலி பணியிடங்களுக்கு ஏற்ப திருவிழா காலங்களில் நியமனம் செய்யப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு (மாமன்ற தீர்மானம் எண்.1054 நாள் : 28.02.2011 துப்புரவு பணியாளர்கள் 621 நபர்கள் கொசு ஒழிப்பு பணியாளர்கள் 60 நபர்கள் சேர்த்து மொத்தம் 681 நபர்கள் கோப்பு எண்.மந2/9156/2007) நான்கு மண்டலங்களிலும் துப்புரவுப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வார்டு (மண்டல) அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்ட தற்காலிக தினக்கூலி பணியாளர்களுக்கும் அதிகமான பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதாக அறிய வந்ததால் துணை ஆணையாளர் முன்னிலையில் 05.11.2014ல் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதனடிப்படையில், இறுதியாக தற்போது வட்ட துப்புரவு அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர்களால் அளிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு (நான்கு மண்டல தினக்கூலி துப்புரவு பணியாளர்கள், ஆரப்பாளையம் பேருந்து நிலையம் பணியாளர் மற்றும் கொசு ஒழிப்பு (AMS) பணியாளர்கள்) இறுதி செய்யப்பட்டுள்ளது.

| மண்டலம் எண் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 137 |
| 2 | 210 |
| 3 | 178 |
| 4 | 195 |
| மொத்தம் | 720 |

மேற்கண்ட 720 பணியாளர்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளது போல் 89 நாட்களுக்கு ஒரு நாள் பணி நிறுத்தம் செய்யப்பட்டு பணி செய்து வரவும், ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ததை மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும், இனிவரும் காலங்களில் 89 நாட்களுக்கு ஒரு நாள் பணி நிறுத்தம் செய்யப்பட்டு பணி செய்து வர மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**நிபந்தனை :**

மேற்கண்ட 720 பணியாளர்களில் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள 681 பணியாளர்களுக்கு மட்டுமே காலமுறை ஊதியம் தொடர்பான மேல் நடவடிக்கை தொடரப்படும். இதர பணியாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையிலான ஊதியம் வழங்குவதற்கு மட்டுமே பொருந்தும்.

**தீர்மான எண்:835**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**25)ந.க.எண்.மதி 1/2516/02**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண்.10, பிளாக் எண்.79, சர்வே எண் 277(P), அண்ணா பேருந்து நிலைய வளாகத்தினை அரசு இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கத்திற்கு ஒதுக்க கோரி முதல்வர் அரசு இராஜாஜி மருத்துவமனை அவர்களின் ந.க.எண்.16436/தி.வ/2002, நாள் 22.9.2003. கடிதம் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் 2.52 ஏக்கர் இடத்தினை இலவசமாக நிலமாற்றம் செய்ய மாமன்ற தீர்மான எண்.537, நாள் 22.2.2006-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் முதல்வர் இராஜாஜி மருத்துவமனை அவர்களின் ந.க.எண்.16436/தி.வ/2002, நாள் 2.3.2006

கடிதத்தில் 2.88 ஏக்கர் நிலம் தேவைப்படுவதாக தெரிவித்ததின் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 268, நாள் 7.9.2006 கண்டுள்ளபடி 2.88 ஏக்கர் இடத்தினை இலவசமாக நிலமாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சி தலைவர் தமது நேர்முக கடித எண்.C.A(E)30/2007, நாள் 28.3.2007-ல் அண்ணா பேருந்து நிலைய வாளகத்தில் 3.12 ஏக்கர் நிலத்தினை மருத்துவமனை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் என தெரிவித்துள்ளதின் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண்.29, நாள் 25.7.2007-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ACCOUNTANT GENERAL, CHENNAI அவர்களின் 2008-09 ஆண்டின் தணிக்கை தடை எண்.2/2008-09-ல் நிலமாற்றம் செய்வது தொடர்பாக கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“அரசாணை (நிலை) எண் : 35, நாள் : 17.02.1997-ல் (நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை) நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் (Private Land belonging to Municipal Councils and Municipal Corporation Councils) அது எந்த அரசு மற்றும் அரசு துறை சார்ந்த நிறுவனத்துக்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும்”.**

மேற்கண்ட தணிக்கை தடையின் அடிப்படையில் பத்திர பதிவு துறையின் வழிகாட்டி மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.5000 வீதம் 3.12 ஏக்கர் (312 Cent x 436 sqt = 136032 சதுர அடி) 136032 x 5000 = 680160000 அல்லது 68 கோடி பெற்ற பின்னர் அரசு இராஜாஜி மருத்துவமனை பெயரில் நிலமாற்றம் செய்யலாம் என இவ்வலுவலகம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு (கடித எண்.B26/Pdl-7/2014, நாள் 05.01.2015) கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பயன்பாட்டில் உள்ள அண்ணா பேருந்து நிலைய வளாக இடத்திற்கான கிரைய தொகை 68 கோடி அரசிடமிருந்து பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் அணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:836**

**அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பயன்பாட்டிலுள்ள அண்ணா பேருந்து நிலைய வளாக இடத்திற்கான கிரையத் தொகை ரூ.68 கோடியை அரசிடமிருந்து பெறுவதற்கு குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

26)**மதி 1/16122/14**

மதுரை மாநகராட்சி மைய திட்டப்பிரிவில் செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் திரு.ஐ.ரெங்கநாதன், உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களை செயற்பொறியாளர் (திட்டம்) ஆக பதவி உயர்வு வழங்கி வரப்பெற்ற அரசாணை எண்.(2ப)149, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந IV), நாள் 22.12.2014ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:837**

**அரசாணை பதிவு செய்யப்பட்டது.**

**27)மவ3/015767/13**

மதுரை மாநகராட்சி மண்டலம்-4ல் உள்ள மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வெள்ளைக்கல் அவனியாபுரம் புல்பண்ணையில் 29 ஏக்கர் பரப்பளவில் 01.02.1956 முதல் உளவடை பாத்தியத்தை (cultivating Tenant) அடிப்படையில் திரு.திருமால்தேவர் மற்றும் ஒன்பது பேர் அனுபோகத்தில் உள்ளனர். மேற்படி புல்பண்ணையில் புற்கள் வளர்ப்பதற்கு பதிலாக சாக்கடை கழிவுநீரை பாய்ச்சி கீரைகள் பயிர் செய்து வருவதாகவும், அவ்வாறு பயிரிடப்படும் கீரைகளை உண்பதால் பொதுமக்களுக்கு உடல்நல கோளாருகள் (Health Hazards) ஏற்படுவதாக மதுரை உட்கோட்ட நடுவர் மற்றும் கோட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புல்பண்ணையில் மாடுகளுக்கு உணவாக புற்கள் மட்டும் வளர்க்கவும், காய்கறிகள் மற்றும் கீரைகள் பயிரிட தடை செய்யவும், மேலும் தற்போது செலுத்தப்பட்டு வரும் உரிமம் தொகை ஏக்கருக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.1,000/- என்பது 1996ம் வருடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது மாநகராட்சி வருவாயை கருத்தில் கொண்டு 2015ம் ஆண்டு முதல் ஒரு ஆண்டிற்கு ஒரு ஏக்கருக்கு ரூ.50,000/- என்று உரிமம் தொகை நிர்ணயிக்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>தீர்மான எண்:838</u>**

**<u>2015–ம் ஆண்டு முதல் உரிமைத்தொகை ஏக்கர் 1–க்கு ஆண்டிற்கு ரூ.20,000/- என தொகை நிர்ணயம் செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 07.01.2015

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

# Table Agenda - நாள் : 09.01.2015

**1) மநி 12/037340/2014**

மதுரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் பதிவு வைப்பறை, ஓய்வூதியப்பிரிவு, பொது நிர்வாகப் பிரிவு ஆகிய மூன்று முக்கியபிரிவுகளில் மாநகராட்சி அலுவலர்களின் பணியினை நேரடியாக கண்காணிப்பதற்கும் மேற்படி பிரிவுகளில் பொது மக்களின் தேவையில்லாதா வருகையினை கட்டுப்படுத்தும் பொருட்டும் கண்காணிப்பு கேமரா நிறுவுவதற்கும் அதற்கான செலவு தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:839**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) மநி 12/037340/2014**

மதுரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களது வருகைப் பதிவேட்டினை Bio-metric முறையில் Machine மூலம் செயல்படுத்துவதற்கும் அதற்கான செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:840**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) H2/11126/14**

மதுரை மாநகராட்சியில் சுப்பிரமணியபுரம், சிம்மக்கல், சங்கிலித்தோப்பு (கக்கன் காலனி), மூலக்கரை, புட்டுத்தோப்பு, கரும்பாலை, ஜம்புரோபுரம் ஆகிய பகுதிகளில் காலனி வீடுகள் கட்டி நான்காம் நிலை பணியாளர்களான துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் தேர்ச்சி திறனற்ற பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் குடியிருப்பதற்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், பல பணியாளர்களின் குடியிருப்புகள் ஓய்வு மற்றும் காலஞ்சென்ற பின்னரும் வீடுகள் காலி செய்யாததால், தற்போது பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு வீடுகள் காலி செய்யாததால், தற்போது பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது. எனவே, ஏற்கனவே வீடு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களின் ஓய்வு பெறும் நாளில் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை காலி செய்து சாவிகளை ஒப்படைக்கப்பட வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் குடியிருக்கும் ஒரு மாத காலத்திற்கு வணிக அடிப்படையில் வாடகை வசூலிக்கப்படும். மேலும், ஒரு மாத காலத்திற்கும் கூடுதலாக வீடுகளை காலி செய்யாமல் இருந்தால் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் வணிக அடிப்படையில் வாடகை வசூலிப்பதுடன் மேற்படி குடியிருப்புகளின் குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு ஆகியவை துண்டிக்கப்படும் என்ற நிபந்தனைகள் விதிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:841**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) மந.2 / 00856 /2015**

மதுரை மாநகராட்சி 14 லட்சம் மக்கள் தொகையை கொண்ட தென் தமிழகத்தின் மிகப்பெரிய நகரங்களின் ஒன்றாவதுடன் நாள் ஒன்றுக்கு நகர மக்கள் தொகையில் 40 சதவீகிதம் மக்கள் சுற்றுளா வணிகம் போன்ற காரணங்களுக்காக வந்து செல்கின்றனர், இதனால் சாலைகள் மற்றும் தெருக்கள் முதலியவைகள் காலை நேரத்தில் சுத்தம் செய்யப்பட்டாலும் ஒரு சில மணி நேரத்திற்குள் மீண்டும் வணிகர்கள் தங்கள் கடையின் குப்பைகளை தெருவில் கொட்டுகிறார்கள். மேற்படி குப்பைகளால் சுகாதார

கேடு ஏற்படுவதுடன் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகிறது, எனவே சாலையோரம் குப்பை கொட்டுகிறவர்கள்,கழிவுநீர் ஊற்றுபவர்கள்,சிறுநீர் கழிப்பவர்கள், வீதிகளில் கொண்டி மாடுகளை அவிழ்த்தி விடுபவர்கள் மற்றும் சுகாதாரகேடு விளைவிக்கும் காரணத்திகால் கீழ்கண்ட விபரப்படி அபராதம் விதிக்க கோறும் ஆணையாளரின் குறிப்பு.

**சேவைக் கட்டணம்**

| வ.எண் | மாநகராட்சி சுகாதாரகேடு விளைவிப்பவர்கள் | முதல்முறை வசூல் செய்யும் கட்டணம் | இரண்டாம்முறை வசூல் செய்யும் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | சாலையில் மாநகராட்சி மூலம் வைக்கும் குப்பை தொட்டிகளை தவிர்த்து இதர இடங்களில் குப்பைகளை கொட்டி சுகாதாரகேடு விளைவிப்பவர்கள் | 100 | 500 |
| 2 | நடைபாதை மற்றும் பொது இடங்களில் கழிவுநீர் ஊற்றினால் | 100 | 200 |
| 3 | ஆடு,மாடுகள் முதலியன கால்நடைகளின் கழிவுநீரை பொது இடங்களில் ஊற்றினால் | 200 | 500 |
| 4 | பொது இடங்களில் கால்நடைகளை கட்டினால் ஒன்றுக்கு | 3000 | 5000 |
| 5 | பொது இடங்களில் சிறுநீர் கழிப்பவர்கள் நபர் ஒன்றுக்கு | 50 | 100 |
| 6 | சாலையோரம் முதலியன பொது இடங்களில் மரம் செடி புல் புதர்களில் கொட்டுதல் (1 டிரை சைக்கிள் அளவிற்கு) | 500 | 1000 |
| 7 | சாலையோரம் மற்றும் பொது இடங்களில் மரம், செடி, புல், புதர்களில் கொட்டுதல் (1 டிரை சைக்கிள் அளவிற்கு மேல் ) | 2000 | 5000 |
| 8 | மழைநீர் வடிகால்களில் வீட்டு ,வணிக கழிவு நீர்களை விடுதல் | 2000 | 5000 |
| 9 | கொசு உற்பத்தியாக வழிவகை செய்யும் வீடுகள் | 100 | 200 |
| 10 | கொசு உற்பத்தியாக வழிவகை செய்யும் வணிக நிறுவனங்கள் | 200 | 500 |
| 11 | கொசு உற்பத்தியாக வழிவகை செய்யும் தொழிற்சாலைகள் | 500 | 1000 |
| 12 | பொது சுகாதாரக்கேடு விளைவிக்கும் படியாக திறந்த நிலையில் உள்ள பண்டங்களை வைத்து விற்பனை செய்தல் | 200 | 500 |
| 13 | சாலையோரங்களில் இளநீர் கூடுகளை போட்டு வைத்தல் | 500 | 1000 |
| 14 | மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தாங்கள் சொந்த இடங்களில் கருவேல முட்செடிகளை வளர்த்தல்,(மரம் ஒன்றிற்கு) | 100 | 200 |

**தீர்மான எண்:842**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5)** மநு6/22732/2014

மதுரை மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) திட்டத்தின் கீழ் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு அடுமனை பயிற்சி (Bakery Training) தனியார் நிறுவனம் மூலம் மதுரை மாநகராட்சியில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வழங்க

இருப்பதால், மேற்படி தனியார் நிறுவனம் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் பயிற்சி வகுப்புகளை சிறப்பாக நடத்துவதற்கும் திருமதி. B. நீலவள்ளி (முன்னாள் NULM திட்ட மேலாளர்) என்பவரை NULM சிறப்புத் திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒரு பணியாளரை நியமனம் செய்யும் நாள் வரை அல்லது ஓராண்டு காலத்திற்கு (எது முந்தையதோ அதுவரை) மாதம் ரூ.30,000/- என்ற தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணி செய்ய அனுமதிப்பதற்கும், மேற்படி ஊதியத்தினை NULM (SJSRY) திட்டத்தின் கீழ் 2013 - 14 ஆம் ஆண்டிற்கான A&OE நிதியிலிருந்து சம்பளமாக வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:843**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) மவ3/037384/14**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்: 85ல் கான்சா மேட்டு தெருவில் அமைந்துள்ள அவ்வை மாநகராட்சி பள்ளி கிளைக்கட்டிடம் தற்போது கடந்த 5 ஆண்டுகளாக எவ்வித பயன்பாடின்றி இருப்பதாலும் அதை வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என வார்டு பொறியாளர் மற்றும் மாநகராட்சி கல்வி அலுவலர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளபடி மேற்படி இடத்தில் மாநகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு பள்ளி பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மாத வாடகை ரூ2,75,000/-டெபாசிட் தொகை ரூ5,00,000/- என நிர்ணயம் செய்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்து மாத வாடகை அடிப்படையில் வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:844**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ம.பொ.4/Est.No.576/14-15**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2 வார்டு 43 அழகர் கோவில் மெயின் ரோடு தல்லாகுளம் பெருமாள் கோவில் மேற்குப்புறம் உள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகம் முன்புறம் உள்ள காலியிடத்தில் 8 x 16 சதுரடி அளவில் 9 கடைகள் Zero பட்ஜெட் அடிப்படையில் கட்டப்பட்டு பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும் ஒரு கடைக்கு மாநகராட்சியின் உத்தேச மாத வாடகை கடை ஒன்றுக்கு ரூ.5000 திரும்ப செலுத்தப்படாத முன்வைப்புத் தொகை கடை ஒன்றுக்கு ரூ.2,50,000 நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**தீர்மான எண்:792**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) மவ3/039925/13**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் 07.01.2015 அன்று நடத்தப்பட்டது ஏலத்தில் ஏலம் போகாத இனங்களின் கீழ்கண்ட இனங்கள் மட்டும் டெண்டர் மூலம் உரிமம் வழங்க கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | இனத்தின் பெயர் | ஏப்ரல் 2014 முதல் டிசம்பர் 2014 (9 மாத இலாகா வசூல் தொகை | 3 மாத இலாகா வசூல் மதிப்பு | மாநகராட்சி 3 மாத ஏல மதிப்பு | டெண்டர் கோரிய 3 மாத தொகை | மாநகராட்சி மதிப்பை விட டெண்டர் கோரிய குறைவு சதவீதம் | டெண்டர் கோரிய தொகை இலாகா வசூலை விட | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | கூடுதல் சதவீதம் | குறைவு சதவீதம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சி அலுவலக சைக்கிள் ஸ்டாண்ட் | 107515 | 35838 | 92458 | 75000 | 18.89% | 52.21 | |
| 2 | அவனியாபுரம் சோணையா பிள்ளை தினசரி மார்க்கெட் | 56216 | 18739 | 34676 | 30000 | 45.96% | 37.53 | |
| 3 | கிருஷ்ணாபுரம் குறுக்குத்தெரு சந்து தினசரி மார்க்கெட் | 54620 | 18207 | 27756 | 15000 | 13.49% | - | 21.38 |
| 4 | நேதாஜி சிலை கட்டண கழிப்பாறை | 66580 | 22193 | 62922 | 49000 | 22.13% | 54.70 | |

டெண்டர் மூலம் உரிமம் கோரப்பட்டுள்ள மேற்கண்ட வரிசை எண் 1,2 மற்றும் 4 ஆகிய டெண்டர் கோரப்பட்ட இனங்கள் துறை ரீதியாக வசூல் செய்யப்படும் தொகையைக் காட்டிலும் டெண்டர் மதிப்பு அதிகமாக உள்ளதாலும் (more than 40% to 50% ) வரிசை எண் 3 மட்டும் துறை ரீதியாக வசூல் செய்யப்படும் தொகையை விட குறைவாக உள்ளது.

மேலும் துறை ரீதியாக வசூல் செய்வதற்கு பல இடற்பாடுகள் உள்ளதாலும், மாநகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டும் மேற்படி டெண்டர்களை ஏற்பது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**தீர்மான எண்:845**

**மதுரை மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரை உள்ள குத்தகை இனங்கள் பொது ஏலம் 07.0.2015 அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் வரிசை எண்.1,2 மற்றும் 4 ஆகிய டெண்டர் கோரப்பட்ட இனங்கள் துறை ரீதியாக வசூல் செய்யப்படும் தொகையை காட்டிலும், டெண்டர் மதிப்பு அதிகமாக உள்ளதாலும், டெண்டர் தொகையினை ஏற்கலாம். வரிசை எண்.3 துறை ரீதியாக வசூல் செய்யப்டும் தொகையைவிட குறைவாக உள்ளதால் 2015–16ம் ஆண்டு ஏல இனத்தில் சேர்த்து ஏலம்விட நடவடிக்கை எடுக்கலாம் என குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 09.01.2015

**<u>தீர்மானம் – 1</u>**

தமிழகத்தின் வரலாற்றில் மக்களின் முதலமைச்சர் அம்மா அவர்களின் சீறிய சிந்தனையில் தோன்றிய திட்டங்கள் அனைத்தும் தமிழக மக்களின் தேவைகளை நிறைவேற்றி வெற்றிகரமான, நிலையான திட்டமாக செயல்படுகிறது. தமிழர்களின் திருநாளாம் தைத் திருநாளை, தித்திக்கும் திருநாளாக கொண்டாடும் வகையில், 1 கோடியே 73 லட்சத்து 23 ஆயிரம் பெண்களுக்கு சேலைகளும், 1 கோடியே 72 லட்சத்து 5 ஆயிரம் ஆண்களுக்கு வேட்டிகளும் வழங்கி இதற்காக ரூபாய் 486 கோடியே 36 லட்சத்தை வழங்கியது மட்டுமல்லாது, இதன்மூலம் 15,000 கைத்தறி நெசாவாளர்களுக்கும், 50,000 விசைத்தறி நெசவாளர்களுக்கும் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை அளித்து தொடர்ந்து தமிழக மக்களுக்காக கிள்ளிக் கொடுத்தால் போதாது என்று அள்ளி அள்ளி கொடுத்து வாரி வழங்கிவரும் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக் கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மாண்புமிகு மேயர்**

**<u>தீர்மானம் – 2</u>**

தமிழக மக்களின் நலனே தன் நலம் என்று கருதி, தமிழக மக்களுக்காக அம்மா உணவகம், அம்மா குடிநீர் திட்டம், அம்மா உப்பு, அம்மா விதைகள், அம்மா மருந்தகங்கள் என்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அதன்மூலம் ஏழை எளிய மக்களை பயன்பெறச் செய்த மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் சிமிண்ட் வழங்க “அம்மா சிமிண்ட் ” என்ற திட்டத்தினை 26.09.2014 அன்று அறிவித்தார்கள். அதனையொட்டி சிமிண்ட் மூடை ஒன்றுக்கு ரூபாய் 190 விலையில், 10.01.2015க்குள் தமிழகம் முழுவதும் உள்ள 470 கிட்டங்கிகளில் மூலம் “அம்மா சிமிண்ட்” 7 கோடி ஏழை, எளிய மக்களுக்கு சென்றடைய வழிவகை செய்து, விலைவாசி உயர்வு என கூச்சலிடும் வீணர்களின் கொட்டத்தை அடக்கி தொடர்ந்து ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவரும் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இம்மாமன்றக் கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு மேயர்**

**<u>தீர்மானம் – 3</u>**

சமீபத்தில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் தமிழக மக்களால் விரட்டியடிக்கப்பட்ட தீய சக்தி கருணாநிதி தன் அரசியல் பிழைப்பிற்காக மக்களைப்பற்றி கவலைப்படாமல்,சமீபத்தீல் போக்குவரத்து தொழிலாளர்களை துாண்டிவிட்டு அதன்மூலம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிநடக்கும் தமிழக அரசிற்கு இதன்மூலம் அவப்பெயரை ஏற்படுத்தி விடலாம் என்ற கருணாநிதி போட்ட அணைத்து குள்ளநரி தந்திரத்தையும் தவிடு பொடியாக்கி,தமிழகத்தில் போக்குவரத்தை சீராக்கி அதன்மூலம் தமிழக மக்களுக்கு சீராக போக்குவரத்தினை தந்திட்டு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவிப்பதோடு,தொடர்ந்து தமிழக மக்களுக்கு தன் அரசியல் லாபத்திற்காக பல்வேறு இன்னல்களை செய்துவரும் தீய சக்தி கருணாநிதியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

**மாண்புமிகு மேயர்**